உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௯.	ஆனந்த வருஷ வைகாசிமீ	பஞ்சி ௨

* முத்திநெறி.

முத்திநெறியென்பது முத்தி+நெறியென இருசொற்கள் சேர்ந்த ஒரு தொடர்மொழியாம். முத்தி, மோக்ஷம், வீடு என்பன ஒருபொருட்பன்மொழிகளே. முன்னிரு மொழியும் வடசொற்கள். ஈற்றது தமிழ்ச்சொல். இம் மும்மொழிகளும் ஒருபொருளையே பயப்பன. வீடென்றதற்கு விடுதலென்பதே பொருளாம். நெறியென்றதற்கு வழியென்பது பொருளாம். இருசொற் பொருளுஞ் சேருங்கால் விடுதற்கு வழியென்பது பெறப்படும்.

இனி விடுவது யாது? விடப்படுவது யாது? ஏன் விடவேண்டும்? விட்ட வழிப்படும் பயன் என்னை? விட்டபின் செல்லும் நெறியாது? அந்நெறியிற் சேறற்கு வேண்டுவன யாவை? என்பனவாதிய வினாக்கள் நிகழும். இவைகளைப்பற்றி ஆராய்ந்து கூறுவாம்.

(1) விடுவது யாது? யாதாமொருபொருளைத் தனதெனக் கொண்டவனே அப்பொருளை விடுதற்குரியனாவன். ஆதலின் அநாதியேயுள்ள பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களுள் பசு மாத்திரமே பாசத்தைக் கொண்டதாயிருத்தலின் அதுவே விடுதற்கு உரிமையுடையதாகும். என்னை? உடைமையாதற்குரிய பாசம்

* இது மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் ௧௬-ம் வருஷோத்சவ காலத்தில் வாசித்தது.

சடப்பொருளாதலின், அதுநீங்க உடைமை கோடற்குரிய சித்துப் பொருளாகிய பதி பசு இரண்டில் பதி ஒன்றையும் பற்றுது நின்மலமாய் நிர்விகாரமாய் விளக்க மெய்திருப்ப பசுமாத்திரம் பாசமாகிய சடப்பொருளைப்பற்றி மலபந்த முடையனும் விகாரியாயினமையால் அப்பசுவே விடுதற்கு உரிமை பெற்றவாறு காண்க.

(2). விடப்படுவது யாது? மேற் கூறப்பட்ட முப்பொருள்களுள் சர்வ வியாபகமாயிருக்கிற பதி முற்றுணர்வு முதலிய குணங்களையுடைய கடவுளாதலாலும், பசு அக்கடவுட்கு அடிமையாதலாலும் பதியை விடுமாறில்லை. ஏனைப்பாசம் சடப்பொருளாதலாலும் பசுவைப் பற்றுதலும் விடுதலும் அதனியல்பாதலாலும் அப்பாசமே விடப்படு பொருளாகும். பாசமெனவே ஆணவமாயை கன்மங்களாகிய யாவுமடங்கும்.

(3) ஏன் விடவேண்டும்? பாசமானது பசுவின் அறிவை மயக்கி இச்சையையுண்டாக்கித் தனுகரணபுவன போகங்களைக் கொடுப்பித்து நல்வினைதீவினைகளிற் புகுத்தி இன்பதுன்பங்களை யடைவித்து இறைவனடிமலர் சேரவொட்டாது பந்தஞ்செய்திருத்தலால் அதனை விடவேண்டுவது அவசியமாம். நல்வினையும் வேண்டப்படாததோவெனில், பொன்விலங்குபோலப் பந்திக்குஞ் சுபாவத்ததேயாதலின் அதுவும் வேண்டப்படாத தென்பதே முடிவாம்.

(4) விட்டவழிப் படும்பயன்யாது? பாச சம்பந்தமிருக்குங்காறும் இறைவனடிமலர் காணப்பெறுமாறில்லை. பந்த நீக்க மெய்திய வழியே இறைவனடிகாண்டல் கூடும். இதனை "செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங்கழீஇ" என்பதனானறிக. முன்னர்த் தடைசெய்து நின்ற பாசம் நீங்கவே இருள் நீக்கத்தில் ஒளிதோன்றுதல் போலப் பாசநீக்கத்தில் அருளொளி தோன்றும். அதுவே துரிய நிலையெனப்படும் அருணிலையில் தோன்றும் சுகப்பிரபையாம். இந்நிலையில் ஆன்மா சென்று பற்றற்கு வேறு பொருளின்மையால் பதியையே முற்றும் பற்றிநிற்கும். அந்நிலையே அதீதநிலையாம். அதில் அடைவதே சிவத்துவ விளக்கமாகிய பரமசுகமாம். இந்தப் பரமசுகமே நித்தியானந்தமாம். இதனையடைதலே பாசத்தை விட்டவழிப்படும் பயனும்.

இங்ஙனம் பாசநீக்கமாகிய முத்தியைக் கூறுமிடத்து உலகத்தி லுள்ள பலவேறு சமயத்தாரும் தத்தம் அறிவிற் கேற்பத்தாம் தாம் கண்டவாறே யானைகண்ட குருடர்போன்று இதுமுத்தி இதுமுத்தி யென்று பலதிறப்படுத்திக் கூறுவர்.

மகளிரின்பமே முத்தியென்ப ரொரு சாரார். ஐந்து கந்தமுங் கெடுதலே முத்தியென்ப ரொரு சாரார். முக்குணமும் அடங்குதலே முத்தியென்ப ரொரு சாரார். மலநீக்கமே முத்தி யென்ப ரொரு சாரார். யாக்கை யழியாமையே முத்தியென்ப ரொரு சாரார். ஊகித்தறிதலே முத்தி யென்ப ரொரு சாரார். உயிர்க்கேடே முத்தியென்ப ரொரு சாரார். அட்டமா சித்தியடைதலே முத்தி யென்பரொரு சாரார். யாதொரு புலனுமின்றிக் கல்லைப்போற் கிடத்தலே முத்தி யென்ப ரொரு சாரார். இவை யனைத்தை யும் பூர்வ பக்கஞ்செய்து கீழ்ப்படுத்தி உயர்வுடையதாக விளங்கு வதுதான் சித்தாந்தமுத்தி யெனப்படும். அதுதான் ஆன்மா பாச நீக்கமெய்திச் சிவத்தோடிரண்டறக் கலந்திருத்தலாம். இதனை

"அரிவையரின் புறுமுத்தி கந்த மைந்தும்
அறுமுத்தி திரிகுணமும் அடங்கு முத்தி
விரவுவினை கெடுமுத்தி மலம்போம் முத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
பாடாண முத்தியிவை பழிசேர் முத்தி
திரிமலமு மகலவுயிர் அருள்சேர் முத்தி
திசழ்முத்தி யிதுமுத்தித் திறத்த தாமே"

என்னும் சிவபிரகாசத் திருவிருத்தத்தா னன்குணரலாம்.

இத்தகைய சித்தாந்தமுத்தி அபரமுத்தி பரமுத்தியென இரு வகைப்படும். இவற்றுள் அபரமுத்தியாவது:—

சாலோக சாமீப சாரூப சாயுச்சியம் என நால்வகையாம்.

சாலோகமாவது:—அவ்வவர் தொண்டிற்கேற்ற புவனபதி புலங்களினெய்தி ஒருவர் மனையிற் பணிசெய்யும் அகத்தொண்டர்க் குளதாம் உரிமைபோல அவ்வவ்வுலகத்துள் யாண்டுந் தடையின்றி யியங்கி அவ்வப்போகங்களை நுகர்ந்து வாழ்வதாம்.

சாமீபமாவது:—அவ்வளவேயன்றி மைந்தர்க்குள் தாம் உரிமை போல அவ்வப்புவன பதிகட்கு அணுக்கராய் வைகி அவ்வப்போக விசேடங்களை நுகர்ந்து வாழ்வதாம்.

சாரூபமாவது:—அவ்வளவே யன்றித் தோழற் குரிய உரிமை போல அவ்வப்புவன பதிகளோடொத்த வடிவும் ஒத்த அணிகல னும் ஒத்த போகநுகர்ச்சியும் பெற்று வாழ்வதாம்.

சாயுச்சியமாவது:—அவ்வப்புவன பதிகளோடொத்த வடிவின ராய் வாழ்தன் மாத்திரையேயன்றி அவ்வப்புவன பதிகளான் அதி ட்டிக்கப்பட்டு அவ்வவ்வதிகாரங்களை அவ்வவர் போலவே செய்து கொண்டு வாழ்வது. இது அபரமுத்திக்கட்படும் சாயுச்சியமல்லது பரமுத்தியாகிய முடிவான சாயுச்சியமன்று. அது பின்னர்க்கூறப் படும்.

இந்திரன் பிரமா விட்டுணு ருத்திரன் முதலியோரது பதவிக ளெல்லாம் அபரமுத்தியாகிய பதமுத்திகளேயாம். இப்பதமுத்திக் குக் காலவளவுண்டு. அதற்கேற்பட்ட காலங் கழிந்தபின்னர் மீட் டும் பிறந்து பக்குவ மெய்தியக்கால் பரமுத்தி பெறுவர். இதனை

"தாண்மியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்
சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோ
ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ
ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றோ
ரூனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா
மொடுங்கும்போ தரன்முனிவு தொழியினுற்ப வித்து
ஞானநெறி யடைந்தடைவர் சிவனை யங்கு
நாதனை முன்னிற்கி னணுகுவர்கற் றூளே"

என்னுஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத்தானறிக.

பரமுத்தியாவது:—முடிவான சாயுச்சிய முத்தியாம். இதனை நெறிகூறுமிடத்து விளக்குதும். இது ஜீவன்முத்தி விதேகமுத்தி என்றிருவகைத்தாம்.

ஜீவன்முத்தியாவது:—எடுத்த சரீரம் நீங்குமுன்னரே பசு கரணங்களெல்லாம் பதிகரணங்களாகப்பெற்று மனங்கண்ணிற்குத்

தோன்றுவனவெல்லாம் பதியின் வடிவமாகவே கண்டு விழித்தகண் குருடராகி ஓடும் பொன்னும் ஒப்பக் கண்டு விருப்பு வெறுப்பு இன்ப துன்ப விவகாரமற்று "எல்லாமு னடிமையே எல்லாமு னுடைமையே யெல்லா முனுடைய செயலே" எனக்கொண்டு பார்க்கு மிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்த பரவசப் பட்டு நிற்கும் நிலையேயாம். இத்தகைய நிலையை யடைந்தவர்களே ஜீவன் முத்தராவர். இவர் "எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலு, முத்தர் மனமிருக்கு மோனத்தே" என்றவாறிருப்பர். இவர்க்கு நல்வினை தீவினையில்லை. மூவகை வினையுள் ஏனை யிருவினையு முன்னரே நீங்க எஞ்சி நின்ற பிராரத்தவினை தீருங்காலும் உடல் விடாமையால் அதனைக் கொண்டிருந்தும் இடையறாது சிவத்துவ விளக்கத்திலே சிவானந்தானுபூதிச் செல்வராயிருந்து உடல் நீங்கியவுடன் பரவெளியிலே சிவத்துடன் இரண்டறக் கலப்புறுவர். இதனை,

"பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞான வயிந்தவத்தின் கலக்கந்
தருஞானம் போகஞா திருஞான ஞேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகும்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞானம்
ஆதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்

புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவங்கீழ் நூக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னாலே
நண்ணியஞா னத்தினா லிரண்டினையு மறுத்து
ஞாலமொடு கீழ்மேலு நண்ணா னாகி
எண்ணுமிக லோகத்தே முத்திபெறு மிவன்றான்
எங்கெழிலென் ஞாயிறெமக் கென்னுமுறை யின்றிக்
கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம்
கழிந்தக்கா லெங்குமாய்க் கருதாங்கோ னிற்பன்"

எனவருஞ் சிவஞானசித்தித் திருவிருத்தங்களா லறிக.

விதேகமுத்தியாவது :—உடல் நீங்கியவழி ஆன்மா பாசநீக்கம் பெறுதலால் சிவத்துவம் விளங்கப்பெற்றுப் பதியுடனிரண்டற க்கலந்து நித்தியானந்த மெய்துதலாம்.

ஆயின் இறைவன் பெத்தான்மாக்களிடத்தும் முத்தான்மாக்களிடத்தும் ஒப்ப நிற்றலால் பாசம் நீங்கிய வழிமட்டும் காணப்படுவானென்பதென்னை? யெனிற் கூறுதும். படலசம்பந்தத்தால் ஒளி மழுக்கமுற்ற கண்ணுக்கும் அஃதின்மையால் ஒளி விளக்கமுற்ற கண்ணுக்கும் ஆதித்தன் சமமாய் நின்றாலும் அவ்வாதித்தன் ஒளி மழுங்கிய கண்ணுக்கு மாலை யிருட்டாகத் தோன்றுவனன்றி ஒளி விளங்கிய கண்ணுக்குத் தோன்றுமாறு போலத்தோன்றான். அது போல முதல்வனும் பெத்தர் மாட்டும் முத்தர் மாட்டும் அத்துவிதமாய் ஒப்பநின்றாலும் பாசத்தானாகிய ஏகதேச அறிவுடைய பெத்தர்க்குப் பாசஞானமேயாய்த் தோன்றுவன். அப்பாசப் பிணிப்புக்கு ஏதுவாகிய அபக்குவம் நீங்கித் தனது திருவருட்பார்வையாற் பத்தி செய்து தன்னையறிதற்குரிய பக்குவராயினார்க்கு பாசத்தானாகிய அவ்வேகதேச அறிவை மாற்றிப் பூரண அறிவு விரியச்செய்து அவரெதிரே விளங்கித் தோன்றுவன். இதனானே முதல்வன் பெத்தம் முத்தி இரண்டினும் ஒப்ப நிற்பினும் ஒப்ப விளங்காமையும் ஆன்மாவுக்கு முத்தி நிலையின் அறிவு நிகழுமாறும் அது முதல்வனது அறிவாகிய அருட்கண்ணை யின்றி அமையாமையும் பெறப்பட்டன.

இனி ஆன்மா முதல்வன் வசமாய் ஒன்றுபட்டுக் கூடுங்கால் பண்டை ஏகதேச அறிவுகெட்டுக் கூடுமோ கெடாது கூடுமோ? எனின், கெட்டுக்கூடுமெனிற் குணங்கெடவே குணியுங் கெடுமாதலிற் கூடுமாறில்லை. கெடாது கூடுமெனின் ஏகதேச அறிவுகெடாத வழி வியாபகப்பொருள் விளங்குதலின்மையால் கூடுமாறில்லை. மற்றெங்ஙனங் கூடு? மெனின், ஏகதேச அறிவைச் செய்யும் ஆணவம் கன்மம் மாயை யென்னும் மலங்கண் மாத்திரையே கெட்டொழிய ஆன்மா தண்ணீரைச் சார்ந்த உப்புப்போல முதல்வன் திருவடியைத் தலைப்பட்டு நிற்குமென்க.

சித்பொருளாயும் வியாபகப்பொருளாயு மிருக்கு மான்மா சித்பொருளாயும வியாபகப் பொருளாயுமிருக்கும் இறைவனிடத்தில்

ந்ன் நிலைகெட்டு ஒன்றுபடுதல் எவ்வாறு பொருந்தும்? சம்பந்த விசேடம் எத்தகையது? எனின், இதனை ஆசிரியர் சிவஞான யோகிகள் சிவஞானமாபாடியத்தின் கண்ணே அத்துவிதச் சொற்பொருளுணர்த்து மிடத்து விரித்தருளி யுள்ளார். அதனை ஒருவாறு சுருக்கிக் கூறுதும். அத்துவித சம்பந்தம் சிவசீவ சம்பந்தமாகிய சித்தாந்த முத்தியெனப்படும். இச்சம்பந்தம ஆற்று நீருங் கடனீருஞ் சேர்தல் போலும் ஐக்கிய சம்பந்தமுமன்று. குணகுணியாய் நிற்கும் தாதான்மிய சம்பந்தமுமன்று. சமவாயமுமன்று. விரலும் விரலும் சேர்தல் போலும் சையோக சம்பந்தமுமன்று. யாதானு மோரியைபுபற்றிக் கூறப்படும் சொரூப சம்பந்தமுமன்று. மற்றென்னையோ? எனின், தாதான்மிய சம்பந்தமாவது குணகுணிகளாயாதல் அவயவ அவயவிகளாயாதல் வேற்றுமைப்பட்டு ஒன்று இரண்டாய் நிற்றற்கேதுவாகிய தாதான்மியமும், அங்ஙனமே இருபொருள் அதுவதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றற்கேதுவாகிய தாதான்மியமும் என இருவகைப்படும். இவற்றுள் முன்னது தாதான்மியமெனவும் பின்னது அத்துவிதமெனவும் கூறப்பெறும். இதனால் "பிரிவறும் அத்துவிதமாகும் சிறப்பினதாய்" என ஆசிரியர் கூறுதலுங்காண்க. இச்சிவ சீவ சம்பந்தம் ஒருவாற்றாற் கலப்பும் ஒருவாற்றான் உடனாதலும் ஒருவாற்றான் வேறாதலும் உண்மைபற்றி "அது கடலிற் சென்றடங்கும் ஆறுபோலெனவும், வானத்தில் வானும் மணத்தில் மணமும் போலெனவும், பண்ணையும் ஓசையும் போ"லெனவும் ஒருபுடை யொப்புமைபற்றி ஆசிரியர்கள் ஆங்காங்குக் காட்டுப வாகலின் ஒன்றற்கொன்று முரணுவதாகக் கொண்டு மலைபற்க.

இம்மூன்று தன்மையும் தன்பாற்றோன்ற இவற்றின் வேறாய் அத்துவிதத்துக்குச் சிறந்தெடுத்துக் காட்டும் உவமையாவது ஆன்மபோதமும் கண்ணொளியுந் தம்மு ளத்துவிதமாய் நிற்றலா மென்க. "காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம் போற் காண வுளத்தைக் கண்டு காட்டலின்" எனவும், "காடடக்கண்டிடுந் தன்மையுடைய கண்ணுக்கேயு முயிர் காட்டிக் கண்டிடுமாபோ லீசனுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்" எனவுங்கூறும். இதுவே இருபொருள் ஒரு தன்மையான் ஒற்றுமைப்பட்டு நிற்கும் தாதான்மியமாகிய அத்

துவிதமாம். கால் + தலை = காறலை. தாள் + தலை = தாடலை எனச் சேருங்கால் லகரமும் தகரமும் றகரமாகவும் ளகரமும் தகரமும் டகரமாகவும் நிற்கும். ஆயினும் அந்த றகர டகரங்களைத் தனித் தனி ஓரெழுத்தென்றாவது ஈரெழுத்தென்றாவது கூறற்கியலாது நிற்றலை உதாரணமாகக் கூறுவாருமுண்டு. ஒருபடி நீருடன் ஒரு படி உப்புக்கலந்தால் உப்பு முழுதும் நீராகி, ஒருபடி ஆகுமன்றி இரண்டுபடி யாதலில்லை. இங்ஙனமே சிவனுஞ் சீவனும் பொருள் வகையா லிரண்டாகவும் கலப்புவகையா லொன்றாகவும் இருத்தல் காண்க. இதுவே சைவ சித்தாந்த முத்தியென்க. இனி ஆன்மா பசுகரணங்களெல்லாம் பதிகரணமாகப் பெற்றுப் பதித்துவமெய்து மெனில் இறைவனைப் போலப் பஞ்சகிருத்தியஞ் செய்து தானு மொரு பதியாகுமோ? என்னில், அற்றன்று. எக்காலத்தும் ஆன்மா இறைவனுக்கு அடிமையேயாம். பெத்தகாலம் முத்திகாலம் மத்தியகாலம் என்னும் முக்காலத்தும் ஆன்மா அடிமையாதலை "அவையுடைமை ஆளாம் நாமங்கு" எனவும் "ஈறிலா ஒன்று பலவாறே தொழும்பாகுமங்கு" எனவும் "உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக்குரிய னுயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே" எனவும் ஆசிரியர்கள் கட்டளையிட்டருளுமாற்று னுணர்க.

அற்றேல் முத்தான்மாக்கள் பஞ்சகிருத்தியஞ் செய்திருப்பதாக நூல்களிற் கூறப்படுகின்றவாறென்னை? எனின், இரும்பை யதிட்டித்து நின்ற அக்கினியாற் சுடப்பட்டதை இரும்பாற் சுடப்பட்ட தென்றாற் போல முத்தான்மாக்களை அதிட்டித்து நிற்கின்ற இறைவன் செய்தருளிய பஞ்ச கிருத்தியங்களை முத்தான்மாக்கள் செயலாகக் கூறுதல் ஆகார இலக்கணையேயன்றி வேறின்மையறிக.

இனி இத்தகைய முத்தியைத் தலைப்படும் நெறியாது? என, ஆராய்வாம். பதிபுண்ணியமே நெறியாகும். அது பொதுச்சிவ புண்ணியம், சிறப்புச் சிவபுண்ணியமென இருவகைத்து. பொதுவாவது:—சிவபுண்ணியத்துக்கு அங்கமாகிய சிவதீக்ஷையின்றிச் செய்யப்படுவது. சிறப்பாவது:—சிவதீக்ஷை பெற்றுச் செய்யப்படுவது. தீக்ஷையினாற்றான் மோக்ஷங் கிட்டுமெனவும், தீக்ஷையின்றி மோக்ஷமடைய விரும்புவோர் கோலின்றி நடக்கத் தொடங்கிய குருடர் போல்வர் எனவும் ஆகமங்கள் விரித்தோதுவனவாம். இச்சிவபுண்

ணியம் மற்றும் பல திறப்பட்டு விரியும் ஆயினும் சரியை கிரியை யோகம் ஞானம் என நாலவகையி னடங்கி அவற்றில் ஒவ்வொன்று சரியையிற் சரியைமுதல் நந்நான்காகி ஞானத்தின் ஞானமீறாகப் பதினாறு வகைப்படும்.

சரியையிற் சரியை முதலியன:—சிவாலயம் அலகிடல் மெழுகல் முதலியன சரியையிற் சரியை. விநாயகக்கடவுள் முதலிய ஒரு மூர்த்தியைப் பூஜிக்கல் சரியையிற் கிரியை. மனத்தில் உருத்திரக் கடவுளைத் தியானித்தல் சரியையில் யோகம். அத்தியான பாவனையின் உறைப்பால் ஓரநுபவ வுணர்ச்சி நிகழ்தல் சரியையில் ஞானம்.

கிரியையிற் சரியை முதலியன:—சிவபூஜைக்கு வேண்டப்படும் உபகரணங்களெல்லாம் செய்துகோடல் கிரியையிற் சரியை. சிவாகம விதிப்படி ஐவகைச் சுத்தி முன்னாக சிவலிங்க வடிவில் செய்யும் பூஜை கிரியையிற் கிரியை. அகத்தே பூஜை, ஓமம், தியானம் மூன்றற்கும் மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம், கிரியையில யோகம். அவ்வந்தரியாக உறைப்பின்கண் ணிகழும் ஓரநுபவ வுணர்ச்சி கிரியையில் ஞானம்.

யோகத்திற் சரியை முதலியன:—இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமும் தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம். இந்த யோகம், சகளம் சகளநிட்களங்களைப்பற்றி நின்று செய்யும் சாலம்பயோகமும் நிட்களத்தைப் பற்றி நின்று செய்யும் நிராலம்பயோகமும் என இருவகைத்து. இவற்றை விரிப்பிற் பெருகும்.

ஞானத்திற் சரியைமுதலியன :—ஞானநூல்களைக் கேட்டல் ஞானத்திற் சரியை. சிந்தித்தல ஞானத்திற் கிரியை. தெளிதல் ஞானத்தில் யோகம். நிட்டைகூடல் ஞானத்தில் ஞானம். இவை ஞானபூஜை யெனவும்படும்.

சரியை தாசமார்க்கம், கிரியை புத்திரமார்க்கம, யோகம் சகமார்க்கம், ஞானம் சன்மார்க்கம் என முறையே பேர் பெறும். சரியை சாலோகத்திற்கும், கிரியை சாமீபத்திற்கும், யோகம் சாரூபத்திற்கும், ஞானம் சாயுச்சியத்திறகும் வழிகளாம். சரியை முதலிய மூன்றும் சாலோக முதலிய மூன்று பதவிகளைக் கொடுத்தன் மாத்திரையே யன்றி ஞானத்தை உதிப்பித்தற்கும் ஏதுவாய் நிற்குமென்பர். இதனை

"சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்ர மார்க்கம்
தாதமார்க் கம்மென்று சங்கரனை யடையும்
நன்மார்க்க நாலவைதாம் ஞான யோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்ய
சாரூப்ய சாயுச்ய மென்றுசதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தா லெய்துமுத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்திப்தமென்பர்"

என்னுஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத் தானறிக.

மேலே கூறிய அபரமுத்தியைச் சார்ந்த சாயுச்சிய முத்தி சரியையின ஞானம், கிரியையின் ஞானம், யோகத்தில ஞானமாகிய மூவகை ஞானங்களா லடையும் பதமாம்.

பரமுத்தியின் முடிவான சாயுச்யமென்பது ஞானத்தில் ஞானத்தாற் கூடப்பெறுவதாம்.

அதுதான் முடிவானதும் மேல் ஒன்றில்லாததுமாகிய உயர்ந்த முத்தியென்பர். அதுவே சித்தாந்த முத்தியெனப்படும். அந்த முத்தியைத் தருவதே ஞானமார்க்கமாகிய சன்மார்க்கமாம்.

இதனை

"பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப்
பரப்பைவல மாக வந்தும்
பரவையிடை மூழ்கியு நதிகளிடை மூழ்கியும்
பசி தாக மின்றி யெழு நா
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசித னக்கடைத்து
மவுனத்தி ருந்துமுயர் மலைமுழை தனிற்புக்கு
மன்னுதச நாடிமுற்றும்
சுத்திசெய் தும்மூல ப்ராணனோ டங்கியைச்
சோமவட் டத்த டைத்தும்
சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க
ளோறுநிலை நிற்கவீறு
சித்திசெய் தும்ஞான மலதுகதி கூடுமோ
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே."

என்னும் தாயுமானவர் திருவாக்கானறிக.

இனி பாசநீக்கந்தானே முடிந்த பொருளோ? என்னின் கூறுதும்: இருள் நீக்கத்தில் ஒளிவிளங்கல்போல பாசநீக்கத்தில் அருள் விளங்குவதாம். ஒளிவிளங்குதல துணையாகப் பொருள்களை உள்ளவாறு கண்டுணருமாறுபோல அருள் விளங்குதல் துணையாக பதிப்பொருளை உள்ளவாறு கண்டுணர்தலமையும். யாதானுமொன்றைப் பற்றி நிற்றலல்லது தனித்து நிற்கும் ஆற்றலில்லாத ஆன்மா ஆணவப் பற்றற்கு வேறுபொருளின்மையானும் ஏனைப் பொருள்களையெல்லாம் முன்னரே கண்டு கண்டு உவர்த்து நீக்கி விட்டமையானும் அவ்வான்மா பதிப்பொருளையே பற்றிநின்று சிவானுபவானந்தப் பேறெய்தும். அனுபவம் அழுந்தி யறிதல். ஆனந்தம் சுத்த சாட்குண்ய பரிபூர்த்தி. ஆகவே ஆன்மா சிவத்தினிடத்திலே அழுந்தி அறிந்து சுத்த சாட்குண்ய பரிபூர்த்திப் பேறெய்திப் பரவெளியிற் கலந்துறுவதே பரசாயுச்ய முத்தியென்றுணர்க. இந்நிலையையடைந்தார்க்கு இறைவன் எவ்வாறிருப்பானெனில், அடியில் வரும் சிவஞான சித்தித் திருவிருத்தத்தாற் காண்க. அதாவது.

"இரும்பைக்காந் தம்வலித்தாற் போலிமையந் தங் குயிலை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னாக்கி
அரும்பித்திந் தனத்தையனல் லழிப்பதுபோன் மலத்தை
யறுத் தமலன் அப்பணைந்த உப்பேபோ லணைந்து
விரும்பிபொன் னினைக்குளிகை யொழிப்பதுபோ லடக்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே."
என்பதாம்

இந்நெறியிற் சேறற்குபாயங்களாவன:—உலகப் பொருள்களிடத் துவர்ப்புக் கோடலும், சிவானந்தத்தில் இச்சை மீதூர்தலாகிய அன்பு கோடலும், மெய்யடியாரோ டிணங்குதலும், அல்லாதாரினத்தை அணுகாது விடுதலும், மெய்யடியார் வேடமும் ஆலயமும் இறைவனெனவே கொண்டு வணங்கலும் இவைபோல்வன பிறவுமாம்.

உலக பதார்த்தங்கள் மாட்டு வெறுப் பெய்தியக்கால் இறைவனிடத்து அன்பு செல்லும். உண்மையன்பரிணக்கம் அதனை நிலைபெறச்செய்யும். பொய்யன்பராகிய இவ்வேடக் கள்வர் மும்மலவ

தலினுங் கொடியவரென்பர். மும்மலங்கள் இலக்கு வாய்த்தவழி மட்டும் அறிவை மறைத்தற்கு ஏதுவாதல் மாத்திரையேயாம். இலக்கு வாயாத வழியும் வாய்க்குமாறு செய்துகொண்டு பல உபாயங்களானும் தம்மோடொப்ப விபரீத உணர்வு கொள்ளச் செய்வாரதலின் சிவபத்தியில்லாத பொய்வேடதாரிகளை அவற்றினு மஞ்சி விட்டொழிதலே அறிவுடைமைக்குச்சால்பாகும். மெய்யன்பர் வேடத்தையும் ஆலயத்தையும் இறைவனுருவே கொண்டு வழிபடவேண்டு மென்பது பாலினுள் நெய்போல் எங்கும் நிறைந்த இறைவன் அங்கே தயிரின் கண் நெய்போல் விளங்குதலால் அவசிய மாயிற்று.

இதனுனன்றே "செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே".

எனவும், "முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே."

எனவும், ஆசிரியர்கள் அருளிச்செய்தருள்வாராயினர். விரிப்பிற் பெருகும்.

இது காறுங் கூறிய தொகைப் பொருளாவன:—முத்தி நெறியென்ற சொற்பொருள் இனையவென்பதும், விடுதற்குரியது ஆன்மாவே யென்பதும், விடப்படுவது பாசமே யென்பதும், பாசத்தாலெய்துந் துன்பங்கள் இவையென்பதும், பாசத்தை விட்டவழி எய்துவது இது வென்பதும், அப்பொழுது அறியப்படு பொருள் இதுவென்பதும், அறிந்தவழி யெய்தும் இன்பம் இனையதென்பதும், அதுவே முத்தியென்பதும், அம்முத்தி இத்தனைவகைத் தென்பதும், அவற்றுட் பாசாயுச்சியமே உயர்ந்த தென்பதும், அம்முத்தியை யடையும் நெறிகள் இத்தனை யென்பதும், அவற்றுட் சிறந்தது சன்மார்க்கமே யென்பதும், அம்மார்க்கத்திற் செல்லுதற்கு வேண்டு முபாயங்களிவை யென்பதும் பிறவுமாம்.

திருச்சிற்றம்பலம்.

மு· ரா· அருணசலக்கவிராயர்.
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் மதுரை.

நியமன ஆராய்ச்சி.

(20-4-14 வைசியமித்திரனில் வெளிவந்த தொடர்.)

வைசியமித்திரன் பத்திராதிபரவர்கள் "அங்கத்தினர்கள் ஒரே அக்கிராசனாதிபதியை நியமிக்க வேண்டுமென்று ஆலோசித்து முடிவு செய்திருப்பதாக அங்கத்தினர் சிலர் நம்மிடம் தெரிவித்தபடியினாலும் அவர்களிடம் கேட்டதைக் கேட்டபடியே 16-3-14 மித்திரனில் குறிப்பிட்டு அறிகின்றோம் என்று நாம் எழுதினோம்" என எழுதி அதற்கு ஆதாரமாக ஒரு கடிதங் காட்டுகின்றார்கள். அது வருமாறு "இவ்விஷயமாய் 4-4-14 ல் நமது ஆபீஸ் மானேஜர் சபையின் காரியதரிசியை எழுதிக் கேட்டதற்கு 7-4-14 ல் பதில் வந்திருக்கிறது. அதில் எங்கள் சபையில் அடுத்த வருஷோற்சவ முதல் ஒரே அக்கிராசனாதிபதியை நியமிப்பதைப்பற்றிச் சில மெம்பர்கள் பேசிக் கொண்டது உண்மை என்றும் தங்கள் பத்திராதிபரவர்களிடத்தில் பிரஸ்தாபித்தது உண்மை என்றும் சொல்லுகின்றார்கள்" என்பதே. அன்பர்களே! கவனியுங்கள். அப்பத்திராதிபர் 16-3-14 மித்திரனில் "தீர ஆலோசித்து முடிவு செய்திருக்கிறார்கள்" என எழுதியதற்கும் அவர் காட்டிய கடிதத்தில் "அக்கிராசனாதிபதி நியமிப்பதைப் பற்றிச் சில மெம்பர்கள் பேசிக்கொண்டது உண்மை" என்று எழுதப்பட்டிருப்பதற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது? சொன்னது ஒன்றிருக்கத் தானொன்று பிரசுரிப்பது வைசிய மித்திரன் பத்திரிகையின் சட்டம் போலும். பல பத்திரிகைகள் உள்ளதை உள்ளபடியே வெளியிடும் முறையை அவர் காணின் அங்ஙனம் வித்தியாசமாய் எழுதத் துணியார்.

பற் பல இடங்களிலிருந்து வரும் ராய்ட்டர் தந்திகளையும் நிருபங்களையும் பத்திராதிபர்கள் குறிப்பிடும்போது "We understand" "We hear" என்றும் நாம் அறிகிறோம். நமக்குச் சமாசாரம் எட்டுகிறது என்றும் முறையே ஆங்கிலப் பத்திரிகைகளிலும் தமிழ்ப் பத்திரிகைகளிலும் எழுதிச் செல்வதைச் செட்டியாரவர்கள் கவனித்திருந்தால்" என எழுதுகின்றார். தந்திகளும் கடிதங்களும் அயலிடத்திருந்து வருவனவாதலின் அங்ஙனம் எழுதுவது முறையே. நேரிற் கேட்டதை அங்ஙனம் எழுதுவது முறையன்றென்பதை இனியேனும் அவர் கவனிக்குக.

"அங்கத்தினர் நேரிற் சொன்ன விஷயத்தை அறிகின்றோம் எனச் சந்தேகப்பட எழுதினோம்" என்றாராதலின் பொய்ப்புகல்வாரிடத் தன்றே சந்தேகம் பிறக்கத்தக்கது என்று கருதி "அங்கத்தினர்களைப் பொய்யர்களென்று எழுதாமல் எழுதினமைக்கு விசனிக்கின்றோம்" என எழுதினோம். அவர் அதனைக் "குயுக்தி யோசனை" என்றார். ஆயின் அவர் சந்தேகமென்று கூறிய கூற்றுக்கு நாம் கூறிய பொருளன்றி வேறு பொருள் தான் யாதோ?

இவ்விதம் எழுதிவிட்டால் அங்கத்தினர்களுக்கு நம்மிடம் பிறழ்ந்த வுணர்ச்சி ஏற்பட்டு விடுமென்று கருதியும் தம்மிடம் அனுதாப வுணர்ச்சி ஏற்பட்டு

விடுமென்று எண்ணியுமே எழுதத் துணிந்தார்போலும். ஆனாலும் "உண்மையறிவுடையார் இவ்விதமான கலகாஸ்பத மயக்க வுரைகளைக் கண்டு சிறிதும் மயங்கார்" என எழுதுகின்றார் கலகாஸ்பத மயக்கவுரை யார்பாலதென்று நுண்ணறிவுடையார் ஆராயின் இனிது விளங்கி அவர் பாலே சாரு மென்க.

வாய் மொழியால் கேள்வியுற்றவைகளை அவை உண்மையாக விருந்தபோதிலும் சந்தேகமாக வைத்துக் கூறுவதே பத்திரிகை முறை என்கின்றார். அங்ஙனமானாலும் அங்கத்தினர் சிலர் ஒரு அக்கிராசனாதிபதியை நியமிக்க வேண்டுமென்று பேசிக் கொண்டதை "தீர ஆலோசித்து முடிவு செய்திருக்கிறார்கள்" என எழுதியது முறையன்றென்பதை இனியேனும் அவர் தெரிந்து கொள்க.

"வித்தியாபாநுப் பத்திராதிபருக்கும் நமக்கும் ஒரு விஷயத்தைப்பற்றி அபிப்பிராய பேதம் நேரிட்டது. அது சம்பந்தமாய் நாம் எழுதிச் சென்றபோது இவ்விஷயத்தை நாம் ஒரு எடுத்துக் காட்டாகக் குறிப்பிட நேர்ந்ததே தவிர வேறில்லை" என்கின்றார். தமக்கும் மற்றொருவர்க்கும் அபிப்பிராய பேதம் நேரிட்டால் நடவாததை நடந்ததாக எழுதியேனும் தங்கூற்றை நிலைநிறுத்த வேண்டு மென்பது அவர் கருத்துப் போலும். நடவாததை நடந்ததாக எழுதுவது முறையன்றென வுணர்க.

"அக்கிராசனாதிபதி யிருந்து ஒரு விஷயத்தைப் பேசினாலும் அதுவும் நிருவாகக் கமிட்டி மெம்பர்களின் மெஜாரிட்டி யில்லாவிட்டால் முடிவென்று சொல்லப்படமாட்டாது. நிருவாகக் கமிட்டி மெம்பர்களின் மெஜாரிடியைப் பொறுத்ததாக ஒருவிஷயத்தின் தீர்மானம் இருக்குமே தவிர அக்கிராசனாதிபதி இருப்பதையும் இல்லாதிருப்பதையும் பொறுத்ததாக இராது" என்கின்றார். மெஜாரிடியில்லாவிட்டாலும் அக்கிராசனாதிபதி முடிவு செய்யலாமென்று நாம் எவ்விடத்தாவது எழுதினோமா? அவர் இப்படிப்பட்ட அநாவசியமான விஷயத்தை எழுதியது பத்திரிக்கையின் இடத்தை நிரப்புங் கருததாற் போலும்.

அவர் நடவாததை நடந்ததாக எழுதினமையை ஆக்ஷேபித்து நாம் உண்மையைப் புலப்படுத்தி எழுதிக்கொண்டிருக்கும்போதே ஆக்ஷேபிக்குங் கருத்து நமக்கு இல்லையென அடியோடு புரட்டி யெழுதுகின்றார். இதுவும் வியப்பே. ஆக்ஷேபிக்குங் கருத்து நமக்கு இல்லாவிடின் அவர் எழுதியதற்கு நாம் மறுப்பு எழுதுவானேன்?

"சபையின் அங்கத்தினர்களை எழுதிக்கேட்டு உண்மை தெளியாமலும்" என்கின்றார். அக்கிராசனாதிபதி யில்லாமல் நிருவாகக் கமிட்டி கூடாததலால் நாம் இவ்விஷயத்தைப்பற்றி அங்கத்தினர்களை எழுதிக் கேட்க வேண்டுவதில்லை யென அறிவாராக.

"தமக்கு ஏற்பட்ட சந்தேகத்தை நமகது எழுதிக் கேளாமலும்'' என்கிறார். சபை சம்பந்தமாய்ச் சந்தேகம் ஏற்பட்டாலும் அவர்க்கு எழுதிக்கேட்பது எக்காரணம் பற்றியோ?

''உண்மை இதுவென உலகம் அறிந்து கொள்ளாதிராது'' என்கின்றார். அது எமக்கும் உடன்பாடே.

அப்பத்திராதிபர் நடவாததை நடந்ததாகத் தாம் எழுதினமையை ஸ்தாபித்தற் பொருட்டு இன்னும் யாதெழுதினாலும் பலனில்லை. வைசிய சிவானந்த சபை வருடோற்சவத்தில் ஒரு அக்கிராசனாதிபதி நியமன விஷயததை நிருவாகக் கமிட்டி கூடவாவது யாதொருவித முடிவும் செய்யவாவது இல்லை யென்பதை யாவரும் நன்கு தெளிக.

"நாம் பிரசுரியோம் என்பதை எங்ஙனங் கண்டார்'' என்கிறார். நமது நண்பரொருவர் குணாநேயோன் என்று கையெழுத்திட்டு ஒரு விஷயம் எழுதியனுப்ப, அவர்க்கு வந்த பதில் கடிதத்தில் இதுபோல்வனவற்றை நாம் பிரசுரியாது நிறுத்தி விட்டோம் என எழுதப்பட்டிருந்தது. அதனை நாம் பார்த்தோமாதலின் முதலில் எழுதிய விஷயததை அவருககு அனுப்பாமல் வித்தியாபாநுவுக்கு அனுப்பினோம். அது நிற்க. நாம் பிரசுரியோம் என்பதை எங்ஙனங் கண்டார் என எழுதியவர் நாம் எழுதும் விஷயத்தை முற்றிலுமன்றோ பிரசுரித்தல் வேண்டும். அங்ஙனமன்றிப் பிரசுரிக்கப்பட மாட்டாதென இடையில் நிறுத்தியது அவரெழுத்திற்கு அவரே விரோதபபடுத்தியதாகு மென்க.

நாம் அனுப்பிய இவ்வியாசத்தை முதல் வாரத்தில் வெளியிடும் நோக்கமிருந்தமையால அவ்வாரப் பத்திரிகையில் இது விஷயமாய் ஒன்றும் எழுதாதவராய் அடுத்த வாரத்தில் நியமன ஆராய்ச்சி முன்னமே குறிப்பிடப்பட்டிருப்பதால் பிரசுரிக்கபபட மாட்டாதென எழுதிவிட்டார். ஒரு வாரம் நிறுத்தி வைத்து இவ்வாறு எழுதினமை நாம் காட்டியவற்றிற்குப் பதிலெழுதக் கருதியலாமைபோலு மென யூகிக்க இடஞ்கின்றது. நியமன ஆராய்ச்சி இது வேறு முன் வெளி வந்தது வேறாயிருப்பதை யுணராமல் அவர் நியமன ஆராய்ச்சி முன்னமே குறிப்பிட்டிருப்பதால் என எழுதினதற்காக முன் எழுதினதையே இப்பொழுதும் எழுதியிருக்கிறோ மென்று அறிவுடையார் கொள்ளார்.

பிச. அரு. அரு. அருணசலஞ் செட்டி,

அக்கிராசனாதிபதி, வைசிய சிவாநந்த சபை, தேவகோட்டை.

°0-6-14.

சங்கங்களின் வருட பூர்த்திக் கொண்டாட்டங்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 13-வது வருட பூர்த்திக் கொண்டாட்டமானது காளித மேமீ 16உ முதல் 19உ வரை இராமநாதபுரம் சேதுசமஸ்தானம் இராமலிங்கவிலாசத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கொழும்பு அட்வக்கேட்ஜனரல் ஆனரபில் பொ இராமநாத முதலியாரவர்கள் அன்றுதினம் அக்கிராசனம் வகித்துப் பலவகையிலும் மிகச் சிறப்பித்தார்கள். மஹாமஹோபாத்யாய பிரும்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் முதலிய பல தமிழ் வித்துவான்களும் ஆங்கில நிபுணர்களான பலரும் மற்றும் பல கனவான்களும் வந்திருந்தார்கள். தமிழ் வேந்தர் திலகமாகிய ஸ்ரீமத் சேதுபதி மகாராஜா அவர்கள் மிக்க அன்பாகவும் ஆதரவாகவும் வந்திருந்த ஒவ்வொருவரையும் தக்கவாறு கௌரவத்துடன் உபசரித்தார்கள். 17உ முதல் மகாமகோபாத்தியாயர் ப்ருமஸ்ரீ வே. சாமிநாதையரவர்களே அக்கிராசனம் வகித்தார்கள். அநேக வித்துவான்கள் எழுதிவந்த வியாசங்கள் பல வாசிக்கப்பட்டன. தமிழ்ச்சங்கம் செய்யவேண்டிய வேலைகளை ஆலோசித்து அமைப்பதற்காக ஒரு வித்வத் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. இது மிகவும் அவசியமான தொன்றே. சங்கத்தின் அபிவிருத்தி கருதி ஸ்ரீமத் சேதுபதி மஹாராஜா அவர்கள் பதினாயிர ரூபா நன்கொடை யளிப்பதாகவும், தமிழ்ச்சங்கம் உபாக்கிராசனாதிபதி ஸ்ரீமான் சா. ராம. மு. சித பெத்தாச்சி செட்டியாரவர்கள ஐயாயிர ரூபாவுக்கு அதிகமாகவே கொடுப்பதாகவும் வாக்களித்தார்கள். மற்றுஞ் சிலர் இயன்றளவு உதவி செய்தார்கள். எல்லா விதத்தாலும் மிகச் சிறப்பாக இவ்வருஷோத்ஸவம் நடைபெற்றது. சென்ற 12 வருஷங்களில் நடந்த கொண்டாட்டங்களைவிட இது மிக்க சிறப்பாக நடந்ததென்பதுபற்றி ஸ்ரீமத் சேது மன்னரவர்களைப் புகழாதாரில்லை.

கோனேரிபட்டு ஞானசம்பந்த நற்சபை.

இதன் இரண்டாவதாண்டு பூர்த்திக்கொண்டாட்டமானது, காளித வைகாசிமீ அ, கஉ-களில நன்கு நிறைவேறியது சென்னை மகாமகோபாத்யாயர் ப்ருமஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அழைப்புப் பத்திரத்தில் குறிப்பிட்டவாறு வித்வான்கள் உபந்யாசங்களும் மாணக்கர்கள் வியாசங்களும் திருநெல்வேலி இந்துகாலேஜ் சைன்ஸ்போதகர் ப்ருமஸ்ரீ ஏ மகாலிங்கையரவர்கள், திருநெல்வேலி ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஓதுவாரவர்கள், வலயபட்டி விநாயக வித்தியாசாலைத் தமிழ்ப்போதகர் ஸ்ரீ கெ. திரு. இராமசாமி ஐயங்காரவர்கள், திருவையாறு சம்ஸ்கிருத காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. சந்தானையங்காரவர்கள் இந்நால்வர்களுடைய இன்னிசைப் பாடல்களும் சபையோர்க

ளுள்ளமுருகச் செய்தன. அக்கிராசனாதிபதியவர்கள் ஒவ்வொரு உபந்யாச சாரங்களையும் மிகநன்ருக விளக்கிப்பேசியதுடன் பற்பல அரிய பெரிய விஷயங்களைக் கூறினார்கள். நகரத்தார்கள் மிகவும் அன்புடன் யாவரையும் உபசரித்தனர். இவ்விதம் இரண்டு தினங்கள் நடந்தன. பல வித்துவான்கள் வாழ்த்துக்கவி கூறினார்கள். ௩௦-உ காலையில் மறுபடி சபைகூடிப் பல முக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசிச் சில தீர்மானங்கள் செய்தார்கள். அவை வருமாறு:—

அக்கிராசனாதிபதி மகாமகோபாத்தியாயர்

ப்ருஹ்மஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள்

தமிழ்ப்பண்டிதர், பிரஜிடென்ஸி காலேஜ், சென்னை.

(1) இந்நாட்டிலுள்ள நகரவூர்களில் தமிழ்க்கலாசாலைகளை யேற்படுத்துதற்குத் தக்க முயற்சியை மேற்கொள்ளுதல்.

(2) கலாசாலைகளில் தேவாராதி திருமுறைகளைப் பண்முறையுடன் கற்பித்தல்.

(3) ஒவ்வொரு கலாசாலைகளிலும் தெய்வபக்தி, இராஜபக்திகளைப் போதிப்பிதல்.

(4) கலாசாலைகளில் தமிழைப் பிரதானபாடமாகவும் ஸம்ஸ்கிருத ஆங்கில பாஷைகளைத் துணைப்பாடங்களாகவும் கற்பித்தல்.

(5) முறையாகக் கற்று, சிலமுற்று, தக்கவாறு யோக்கியதாபத்திரம் பெற்றவர்களைக் கலாசாலைகளில் உபாத்தியாயர்களாக நியமித்தல்.

(6) மாணாக்கர்களுக்குப் பிராசீன வொழுக்கங்களையும் சுகாதாரங்களையுங் கற்பித்தல்.

(7) நவீன ஆசாரங்களில் நல்லனவற்றையெல்லாம் பூர்வாசாரங்களுக்கு விரோதமில்லாத பக்ஷத்தில் கைக்கொள்ளச் செய்தல்.

(8) கலாசாலைகளில் நியமமாகக் கற்கும் மாணாக்கர்களுக்குப் போதித்து வருதலுடன், பிரத்தியேகமாக வந்து கற்க வேண்டுபவர்களுக்கும் போதித்து வரச்செய்தல்.

(9) மாணாக்கர்கள் கற்குந் தமிழ்ப்பாடல்களைச் சீர் வரையறை செய்து, இயன்றவரை இன்னிசையுடன் படிக்கச் செய்தல்.

(10) மாணாக்கர்களுக்குரிய ஸமய வுணர்ச்சியை வளர்த்தல்.

(11) பெண்கல்வி பரவச்செய்தல்.

(12) பெண்மக்கட்குத் தையல் முதலிய கைத்தொழில்களைக்கற்பித்தல்.

(13) இதுவரை யச்சிடப்படாத தமிழ் நூல்களைத் தக்கவர்களைக் கொண்டு நன்ருக ஆராய்வித்துப் பதிப்பிக்கச்செய்தல்,

(14) பழைய கையெழுத்துப் பிரதிகளை இயன்றவரையில் தேடித் தொகுத்து காப்பாற்றி வைப்பதுடன், கூடுமானால் காகிதத்திற் பிரதி செய்வித்தல்.

(15) மாணாக்கர்கள் கடவுள்வாழ்த்து, நீதி, பக்தி, கற்பனை முதலிய பொருட்செறிவுள்ள கவிகளில் தினந்தோறும் ஒன்றிரண்டை மனப்பாடஞ் செய்யச் செய்வித்தல்.

(16) பண்டை நூலாசிரியர், உரையாசிரியர்களிடத்து நாம் நன்றி பாராட்டுவதற்கு அறிகுறியாக அவர்களின் ஞாபகச் சின்னங்களைக் கூடியவரையில் உரிய இடங்களில் அமைத்தல்.

(17) தமிழ் நூலாசிரியர், உரையாசிரியர்பெயர்களால் சபை, பாடசாலை, புத்தகசாலை முதலியவற்றுள் ஏற்றதை நிருமித்து, அவர்கள் செய்த நூலுரைகளை யாராய்ந்து தொகுத்துவைத்தல்.

(18) இந்நாட்டுச் சத்திரங்களில் பிராமணர்களைத் தவிர ஏனைய சாதியார்களுக்கும் ஒழுக்க வழக்கங்களுக்கு விரோதமின்றி எக்காலத்தும் உணவு முதலிய சௌகர்யங்களைச் செய்வித்துப் பாதுகாத்தல்.

(19) மாணாக்கர்களில் ஏழைப்பிள்ளைகளுக்கு (விரும்புவார்களாயின்) இயன்றவரை உணவு, உடை முதலிய சௌகர்யங்களைச் செய்வித்துப் படிப்பித்தல்.

(20) இதுவரை செய்யப்பெற்ற தீர்மானங்களை, நம்நாட்டிலுள்ள வைசிய மணிகளும், ஏனைய தனவான்களும் அங்கீகரித்து நடைபெறச் செய்யும் வண்ணம் அவர்களை வேண்டுதல்.

இத்தீர்மானங்கள் இருபதும் ஸபையோர்களால் முழுமனத்துடன் அங்கீகரிக்கப் பெற்றன.

இங்ஙனமாக எல்லாவிதத்தும் சிறப்புடன் சபை நிறைவேறியது. வாழ்த்துப்பாக்கள் வருமாறு:—

மதுரை மு. ரா. கந்தசாமிக்கவிராயர் கூறிய

வாழ்த்துக்கவிகள்.

தேனமருங் காப்புடைசூழ் கோநகரில் விளங்குஞ்
சிகரத்தார் தீபமெனு நகரத்தார் சீர்த்தித்
தானமெனத் தோன்றியுல கேத்தவளர் ஞான
சம்பந்த நற்சபைமெய் யின்பந்தந் திடுமே

யானைமுகற் பகவினா யகசகலா சாலை
யருள்வாணி மாதிரபுத் தகசாலை மூன்று
மாண்மருங் கரப்பெருமான் றிருவருளா லிரண்டு
வருடமுற்றி மூவாண்டு மன்னுமிந்த நன்னாள். (௧)

தக்ககலா சாலையுடன் புத்தகசா லையுமாச்
சாற்றுமிரு விழிதுலங்குஞ் சபைமுகவாய்த் தமிழின்
மிக்குநிறை பல்வரிசைப் புலவர்புடை சூழ
மின்னுநன்று வெனத்தலைமை மேவியமா மணியே
கைக்கரிதார் கண்டவரென் றுலகுரைக்கும் பஞ்ச
காவியமு மச்சிலெழு காவியமாச் செய்தோய்
மிக்கடன்மா நிலம்புரக்குஞ் சகரவர்த்தி வாக்கான்
மஹாமஹோ பாத்யாய மாப்பட்டம் பெற்றோய். (௨)

பன்னிரக்க முகந்துலங்க விம்மையிலும்மே லாகப்
பயிலுமேற் றம்பணைதனுப் பவிவில்தூர் போக்கி
யுன்னுதெய்வப் பிடிதழுவி யுயர்சிந்தா மணியை
யுலப்பிலாப் புலவரெலா முவக்கும்வகை யுதவி
மன்னுபல மாறுடைக்குள செவ்வியலை வாய்ந்த
வள்ளியோ ருள்ளமுற வாய்மணக்கப் பேசி
நன்னர்சிலப் பதிகாரஞ் சீர்திருநதச் செய்து
நவில்சாமி நாததிரு நாம்முறு பெரியோய். (௩)

கற்றிருப்பார் சிலரினிக்கக் கவியமைப்பார் சிலராக்
கவிபொருள்கூ றுவர்சிலர்நூற் கருத்துரையி னுடனே
மற்றுரையும் வரைவர்சில நுபயசிப்பர் சில்லோர்
வசனமெழு துவர்சிலர்நம் மாணாக்கர் மகிழக்
குற்றமிலாப் போதனைசெய் குவர்சிலரிவ வெல்லாங்
கொண்டவுனைப் போல்பவரைக் கண்டவர்க ளுண்டோ
நற்றமிழின் றவப்பேறே ருருவெடுத்தாங் குதித்து
ஞாலமெலாம் புகழ்சாமி நாதஐயா நிதியே. (௪)

உன்போலச் சபைத்தலைமைக் குரியவர்வே றுண்டோ
வுன்றலைமை பெறுஞ்சபைநே ரொருசபைவே றுண்டோ
பொன்போலச் சூழ்புலவர் போற்புலவ ருண்டோ
புண்ணியநன் னகரத்தார் போன்றவர்வே றுண்டோ
வென்போல நினைப்பாடுஞ் சவம்பெற்றா ருண்டோ
வெல்லாநம மீசனரு ளெனக்களிக்கின் றனனென்
மின்போல மிளிர்சடையப் பரமனரு ளாலே
மெய்யறமுஞ் செந்தமிழுஞ் சைவமுமவா ழியவே. (௫)

அகத்தியனார் தலைமையுறத் தமிழ்ச்சங்கம் பாண்டியர்க ளன்பாற் போற்றப்
புகழ்ச்சியுறுங் கோககரிற் சாமிநா தப்பெரியோன் பொருந்துஞ் சங்க
மகத்துவஞ்சேர் புதுவையர்கோன் பிரதிநிதி காமேசு வரமான் மேவத்
திகழ்ச்சியடைந் ததுபாநு வொளிகுன்று வேந்தருள் சிறந்து வாழி.

சென்னை மைலாப்பூர் P. S. ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்

இ. வை. அநந்தராமையரவர்களியற்றியது.

அவைநூ லுறையுங் கழகமுன் பார்மொழி யான்முறையே
சிவைபாக ஞானமு மன்னதற் காங்கல் வித் தேர்ச்சியுமச்
சவையார்நற் கல்விக் கிடையூறு நீங்கவுஞ் சூழ்வணிசேர்
கவைதீரக் காட்டலிற் கோகசர் வாழிய காஞனன்றே.

மஹாதேவரவர்கள் பங்களாவில் ஸ்ரீ. அ. மகாலிங்கமையரவர்கள்

மிக உருக்கமாக இன்னிசை பாடியபோது

மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் கூறிய செய்யுள்.

வரிக்குருகிப் பத்திரற்குப் பலகையிட்ட பெருங்கருணை வள்ளல் பாதம்
உருக்குருகக் கல்லாரு முள்ளுருக மகாதேவ ருறையுள் வைகி
யிருக்குமுத வாஞ்சாமி நாதனுன்முன் னிசைமழைபெய் யெழிலி நேர்சேர்ப்
பெருக்கமகா லிங்கநற்சீர் எழுதல்பெறப் பலகைதாப் பேறு வேனோ.

மற்றுள்ள கவிகள் பின்னர் வெளியிடப் பெறும்.

அ. முத்துசாமிபிள்ளை.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜை வைபவம்.

மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரர் ஆலயத்தில் பிரதி வருஷம் வைகாசி மீ த்தில் 3 நாள் மட்டும் நடந்து வந்த ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் உற்சவத்தை மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மஹா சந்நிதானமவர்கள் 10 நாள் உற்சவமாக நடத்தும்படி முன் வந்து அதற்கேற்படும் பொருட் செலவையும் ஆதினத்திலிருந்தே கொடுத்து சில வருஷங்களாக நன்கு நடத்தி வருகின்றார்கள். இவ்வருடத்தில் அவ்வுற்சவத்தைச சிறப்பாக நடாத்தியது

டுன் தமது ஆதீனத்தில் ஒவ்வொரு நாளும் ஸ்ரீஞானசம்பந்த விலாசத்தில் பெருஞ்சபை கூட்டி தக்க வித்துவான்களைக் கொண்டு சிறந்த உபந்யாசங்கள் நடத்துவித்தார்கள். உபந்யசித்த வித்துவான்களும் உபந்யாசங்களும் அடியிற் காண்க.

ஸ்ரீ கல்யாணசுந்தரபட்டரவர்கள்—சிவாகமப்பிரமாணியம்
,, அகிலாண்ட சாஸ்திரிகள்—சிவபக்தி
,, அந்தரேசுவர ஐயரவர்கள்—சிறுத்தொண்ட நாயனார் புராணம்
,, மு. ரா. கந்தசாமிககவிராயரவர்கள்—சிவனடியார் பெருமை
,, மு. கதிரேசச் செட்டியாரவர்கள்—சிவஞானம்
,, அ. சண்முகம்பிள்ளையவர்கள்—கடவுளுண்மை
,, மு. கதிரேசச் செட்டியாரவர்கள்—ஸ்ரீமாணிக்கவாசகர் பெருமை.
,, மு. கோவிந்தசாமி ஐயரவர்கள்—திருநீற்றின் மகிமை
,, பொ. முத்தையபிள்ளையவர்கள்—சிவலிங்க தத்வார்த்தம்.

குருபூஜாதினமாகிய 27ட காலை 5 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ பண்டார சந்நிதியவர்கள் வழக்கம்போல் வித்வான்களுடனும், அடியார்களுடனும் ஆலயத்திற்கு எழுந்தருளி ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டு வந்து குருபூஜை, மகேசுவர பூஜை முதலியவற்றை மிகவும் சிறப்பாக நடத்தினார்கள். மாலையில் வித்வான்கள் பலர் வாழ்த்துக் கவிகள் கூறினார்கள். அவை பின்வருவன.

வாழ்த்துப்பாக்கள்.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன வித்துவானும், செயிண்டுமேரி ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமத் மு. கோவிந்தசாமிஐயரவர்கள் கூறியவை.

தேமேவு பூந்தடத்தைச் சேர்ந்துமையின் பாலருந்திப்
பாமேவு மாமறையைப் பைந்தமிழிற்—றாமேவச்
சாற்றுந் திருஞான சம்பந்த தேசிகனார்
ஊற்றமொடு வாழ்கபல்லாண் டு. (க)

நாட்டு முறைகளொரு நான்குங் கடந்தடையும்
வீட்டை மணங்காண மேவிவந்த—கூட்டமெல்லாங்
கொள்ள வளித்தருளுங் கோமான்சம் பந்தரைப்போ
லுள்ளவரு முண்டோ வுரை. (உ)

தீய சமணிருளைத் தீர்த்துச் சிவஞானத்
தூய வொளிபரப்புத் தோணிபுர—மேய

திருஞான சம்பந்த தேசிகா மேன்மை
தருஞான சம்பநதைத் தா. (௫)

வெந்தவுட லென்பதனை மேதினியுள் ளார்காணப்
பைந்தொடியா யாக்கும் பரிசன்னிற்—சந்ததமு
மாக்கு மயன்படைப்பை யம்புவியி லார்மதிப்பார்
நோக்குமரு ளென்னே நுவல். (௬)

மேதினியி லுள்ளார்க்கு மெய்ம்மைப் பொருளுரைத்துப்
பூதி புகழ்ந்தளிக்கும் புண்ணியனார்—ஓதரிய
பாவலர்கள் போற்றலுறும் பண்புடனே வண்மையுங்கொள்
தாவினெறிச் சாமிநா தர். (௭)

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் கூறியவை

ஆட்படுவார்க் கருள்சாமி நாதகுரு விதற்குமுன்ன மருமையாக
வேட்பமொழி பிரசங்கம் பற்பலர்வாய்க் கேட்பியா வித்மென் னென்றூற்
கேட்பவர்தஞ் செவிசெய்தவக் குறையாமற் றதுதீர்ந்த கிரமந் தேர்ந்திங்
காட்பாளுந் தானதனைக் கேட்பித்தான் புண்டைமுறை நலமு மீதே. (1)

பாசடையார் செழுங்கமல மலர்வாவி சூழ்மதுரைப் பதியின் முன்போன்
மாசடையான் கற்றவரை வினையவைத்தா னென்பணியு மலியக் கொண்டான்
பேசரிய கைலாய தானமெய்தி னுணிந்தப் பெற்றி யாவெலம்
மீசனிவ னெனசசாமி நாதகுரு மூர்த்திதனை வியப்ப லாமே. (2)

அந்தானந் தவமிரண்டுநிந் தங்கமழை வளஞ்சுரக்கு மால வாயில்
வந்தானந் தஞ்சைவ சமயிகளுக் கியற்றித்தே வார மென்னும்
தந்தானந் தமிழரசு கோணிமிர்த்த திருஞான சம்பந் தன்றன்
சந்தானந் தழையவரு குருசாமி நாதவள்ளல் சரணம வாழி. (3)

மதுரை ஸ்ரீமத். மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் இயற்றியது.

ஒருத்திமுலைப் பாலருந்திப் பலர்முலைப்பால் பலரருந்தா
தொழிப்பான் வேதத்
திருத்தநெறித் தமிழவிரித்த கர்ழிவள்ள லாதினந்
திகழத் தோன்றுங்

குருதருமருசேர் புகழ்ச்சாமி நாததேசிகன்கருணைக்
கொண்மூ வென்றல்
பொருத்தமுறும் பிரசங்கம் பொழியவுல கங்குளிரப்
புரித லாலே.

மானாமதுரை சப்ரிஜிஸ்தராரும் ஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டுமாகிய
ஸ்ரீமத். ஆர். எஸ். சுப்பிரமணியபிள்ளையவர்கள்
இயற்றியது

செந்தி னகரனைநேர் செவ்வித திருவுருவச்
செந்தி னகரனைசேர் சீகாழி—வந்தருள்சை
வாசரிய சம்பந்த வாச்சரிய சம்பந்த
மாசரிதை யாய்வாழ்கு வாய்.

அங்கயற்கண் ணம்மையரு ளன்புமங்கை யர்க்காசு
கொங்கை சுரக்கவந்த கொற்றவா—செங்கடப்பந்
தார்புனைந்து தாரணியிற் றுழமணர் சூர்பொருந்து
சார்புனைவித தாய்வாழ்வித் தாய்.

வாழிபடை வீடாறு வாழிபசீ காழிநகர்
வாழியடி யார்வீரா மாண்பமைகோல்—சூழிலைவேல்
வாழி சரவணந்தே வர்முறை மன்னுதமிழ்
வாழிநா லேழாக மம்.

சின்னமனூர் ஸ்ரீமத்.
கு. அண்ணாமலைப்பிள்ளையவர்கள் இயற்றியது.

திருமடம் வாழ்க ஞான சம்பந்த ராதி சீர்சால்
குருபரம் பரைசீ ரேழி குலவியே வாழ்க வெங்க
ளருளிக ரருட்சு வாமி நாததே சிகர்தாள் வாழ்க
மருவுசித் தாந்த சைவ மன்னிவாழ்ந் திடுக மன்னோ.

அ. முத்துசாமிபிள்ளை.

புத்தகக் குறிப்பு.

முடி சூட்டு மங்கலம்:—இது நமது மாட்சி தங்கிய 5-வது ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் இந்தியாவிற்குவந்து முடி புனைந்து கொண்ட காலத்தில் ஆங்கில அரசாட்சியின் பெருமையையும் அதனால் நாம் அடைந்துள்ள எண்ணிறந்த நன்மைகளையும் பற்றி உண்மை யன்புடன் பாராட்டிப் பாடப்பட்ட தமிழ்க்கவி நூல். இதனை யியற்றினோர் மதுரை தேவஸ்தான கமிட்டி மெம்பர்களி லொருவராகிய அமராவதி புதூர் ஸ்ரீமாந் வயி. நாக. ராம அ. இராமநாதச் செட்டியாரவர்களே. செய்யுட்கள் யாவும் சொற்பொலிவும் பொருட்சிறப்புங் கொண்டு படிப்பாரை வசப்படுத்தும் மெல்லோசையுடன் நன்கு விளங்குகின்றன. ஒவ்வொரு பாடலுக்கு நேரே ஆங்கில மொழி பெயர்ப்பும் சேர்த்து அழகாக அச்சிட்டிருக்கின்றார்கள். இதனால் செட்டியாரவர்களது ராஜ பகதி யாவராலும் பாராட்டப் படத்தக்க தென்பது தெளிவாம். இதனை நமது பார்வைக்கனுப்பினமைக்காக செட்டியாரவர்களிடம் நாம் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையேம்.

மனோன்மணி:—இஃதோர் சிறந்த தமிழ் (நாவல்) கதைப் புத்தகம். இதனுள் அரிய பெரிய விஷயங்கள் பல அமைந்துள்ளன. சிறந்த 3-உபந்நியாசங்களும் விளங்குகின்றன. படிப்பவர்க்கு மிகவும் இனிமையும் மனவெழுச்சியும் விளையச் செய்யும். இந்நவீனகதைப்புத்தகத்தை யெழுதியவர் மதுரைதிருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீன வித்துவானும், செயிண்டு மேரி ஸ்கூல் தமிழ்ப் பண்டிதருமாகிய ஸ்ரீமத். மு. கோவிந்தசாமி யய்யரவர்களே. இக்காலம் தமிழ் வசனக் கல்வி பரவுதற்கு இத்தகைய நூல்கள் இன்றியமையாப் பெருந்துணையா மென்பது எமது அபிப்பிராயம். ஆங்கில கலாசாலைகளிற் கற்கும் மாணவர்கள் யாவரும் இத்தகைய நல்ல வசன நூல்களையே வாங்கிக் கற்றல் நலமாகும். வாசகப்போக்குத் தெளிவாகவும் இலக்கண அமைதியுடனும் விளங்குகின்றது. இதனை நமதுபார்வைக்கனுப்பிய ஐயரவர்கட்கு நன்றி கூறுதும். இதன் விலை அணா-12. வேண்டியவர்கள் நூலாசிரியரிடத்தும், மதுரை புதுமண்டபம் புஸ்தககடை இ. மா. கோபால கிருஷ்ணக் கோனாரவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

இரட்டைப்பிள்ளைகள் மருட்சிக்கு மருந்து.

தற்காலம் பல்லாவரத்தில் குடியிருக்கும் ஸ்ரீ ஈா. வேதாசலம் பிள்ளையென்பவர் "நாட்டுக்கோட்டையார் தருமம் பயன்படுமா" எனத் தலைப்பெயரும் "சுவாமி வேதாசலம்" எனக் கையொப்பமுமிட்டு வைசிய மித்திரனில் வரைந்ததையும், அதனை மறுத்து வித்தியாபாநுவில் ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் எழுதியதையும், அதனை மறுத்தும் வேதாசலம் பிள்ளை கூற்றைத்தழுவியும் ஸ்ரீ க. சிவகுருநாத பிள்ளையென்பவர் "கந்தசாமிக்கவிராயரின் அபவாத உரையகற்றல்" எனத் தலைப்பெயரிட்டு வைசியமித்திரனில் பொறித்ததையும் நேயர்கள் அறிவார்கள்.

"நாட்டுக்கோட்டையார் தருமம் பயன் படுமா" என்றார் வேதாசலம் பிள்ளை "பயன்படுமா" என்பதிலுள்ள ஆகாரவிகுதி; வினா, எதிர்மறை இரண்டிற்கும் பொது வேனும் சொல்லுவோன் கருத்து நோக்கி இரண்டிலொரு பொருளையே தருவதாகும். "உண்டாயா? சென்றாயா?" என்னுமிடத்தில் சொல்பவன் கருத்து உண்டதும் சென்றதும் உணரப்படாமை குறித்தலின் வினாப்பொருளையே தரும். "விளங்குவாயா? வாழ்வாயா?" என்னுமிடத்தில் சொல்பவன் கருத்து "விளங்கமாட்டாய் வாழமாட்டாய்" என எதிர்மறை விடையைத் தாமே கொடுத்து நிற்கும். இங்ஙனமே வேதாசலம் பிள்ளை கூறிய "பயன் படுமா" என்னுஞ் சொல்லும் "படன் படாது" என எதிர் மறைப் பொருளையே விளக்குமென்பது சாதாரணப்பள்ளிச்சிறாரும் தெள்ளத் தெளிந்த தொன்றாம். இம்மட்டோ! வேதாசலம் பிள்ளை எழுதிய ஏனை வாக்கியங்கள் பலவும் எதிர்மறைப் பொருளையே வலியுறுத்துவனவாம், வேதாசலம் பிள்ளையின் கொடுஞ் சொற்களை யாம் எடுத்துக் கூறற் கஞ்சுகின்றோமாயினும் சண்டு விவகார நிலையில் அவற்றைக் காட்டவேண்டியிருத்தல் பற்றியே உரைக்கப்புக்கனம். அவை வருமாறு;

1. நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் கோடிகோடியாகத் திரவியத்தைச் செலவழித்து சிவாலயங்களை இடித்துக் கட்டுவதில் என்ன பயனுண்டாகப் போகிறது?

2. கோயிலுக்குப் போகிறவர்களே இல்லாத போது கோயிலைக்கட்டியாகும் பயன் யாது?

3. சிவாலயத்தின் அம்மதிகளும் பதி, பசு, பாச லக்ஷணங்களும் தெரியாத சாமான்ய சனங்களுக்கு கோயிலைக் கட்டிக்கொண்டிருப்பதினால் என்ன பயன் விளையப்போகின்றது?

4. ஒருவர்க்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு "அவர் அந்தக் கோவிலுக்கு 60 லக்ஷம் செலவழித்தால் நான் இந்தக் கோயிலுக்கு 80 லக்ஷம் செலவழிக்கிறேன்." என்கின்றார்களே! ஈதென்ன கொடுமை?

5. ஜனங்களின் மன மென்னுங் கோயில் இருளடைந்து பாழாய்க் கிடக்கையில் இவர்கள் வெளிக்கோயில்களை இடித்துக்கட்டிப்பயன் யாது?

6. ....மோசமும் எங்கும் பரவி வருகையில் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் வெறுங் கல்லிலும் சுண்ணாம்பிலும் செலவழிப்பது யாதுக்கு?

7. நன்றாய்ப் பலமாகக் கட்டப்பட்டிருக்கும் பழமையான சிவாலயங்களை யெல்லாம் இடித்துக் கட்டுவது எவ்வளவு நிஷ்பிரயோஜனமான காரியம் என்பது அவர்கட்குப் புலப்படாத தென்னை?

8. இவர்கள் கல்லிலும் சுண்ணாம்பிலும் பொருளை யழித்துக் கோயில் கட்டுவது இங்கே யாருக்கு வேண்டும்?

9. நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் தருமம் இப்படி இதுவரை வீணாய்ப் போனாலும் இனியாவது அவர்கள் இந்தக் காலத்துக்கு அவசியம் வேண்டிய சத்காரியங்களைச் செய்ய முன்வர வேண்டும்.

என்பனவும் இவை போல்வன பிறவும் வேதாசலம் பிள்ளையின் கூற்றுக்களாம். இக்கொடுமொழிகளால் "பயன் படுமா" என்பதிலுள்ள ஆகாரம் எதிர்மறைப் பொருளையே பயக்குமென்பது வசு மாத்ராணிபோல் நாட்டப்பெறும்.

இந்த வேதாசலம்பிள்ளை கூறிய இவ்விஷயங்களனைத்தும் வித்தியாபாநுவில் முன்னமே பூர்வபக்கஞ் செய்து கண்டித்து ஒழிக்கப் பட்டிருக்கவும்,

"இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்று
மடங்காதா ரென்று மடங்கார்—தடங்கணாய்
உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினுங்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்" எனவும்,

"வனைதநு நீருட் கிடப்பினுங் கல்லீரம்
மெல்லென்றல் சால வரிதேயா—மஃதேபோல்
வைகலுங் கல்லாதான் கேட்பினுங் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னு நெஞ்சு" எனவும்

ஆன்றோர் கூறிய பாசுரங்கட்கு இலக்காக வித்தியாபாநுவில் வெளிவந்த விஷயங்களை யெல்லாம் உற்று நோக்காமல் க. சிவகுருநாத பிள்ளை யென்பவர் ஏதேதோ கூறப்புக்கனர். இவரது கூற்றுக்களெல்லாம் தக்காராற் கொள்ளப்படாது தள்ளப்படுவனவே என்பதை யாம் அறிந்து மேலும் இவரது மயக்

கத்தைப் போக்கி இவரை நல்வழிப்படுத்தி உய்யக்கொள்ளவேண்டுமென்று இரக்கத்தானே இவருரைத்த போலி மொழிகளையும் பூர்வபக்கஞ் செய்து தொலைப்பாம்.

(க) "நாட்டுக்கோட்டையார் தருமம் பயன்படுமா" என்ற விஷயம் ஞானசாகரப் புறவுறைக் கடிதத்தில் 5-ஆண்டுக்கு முன்னமே வெளிவந்ததெனவும், அப்போது அதனை மறுக்காமல் இப்போது மறுப்பது சரியன்றெனவும், சிவகுருநாதபிள்ளை கூறுகின்றார். ஞானசாகரம் பிரசித்த பத்திரிகைகளிலொன்றன்று. அதில் இவ்விஷயம் வெளிவந்ததைப் பலர் அறியாதிருத்தல் கூடும். அப்போது மறுக்காமைக்குக் காரணமு மிதுவேயாகலாம். ஒருவன் மூடத்தனத்தால் ஏதோ ஒரு குற்றஞ் செய்வானாயின் ஏதோ பேதை அறியாது செய்துவிட்டான் என அறிஞர் வாளாவிருப்பதும், அவனே மீட்டும் அக்குற்றஞ் செய்வானாயின் தூணொடு பிணித்தும் கைவிலங்கிட்டும் நையப் புடைத்தும் புத்தி புகட்டுவதும் பெரியாரியல்பாம். இங்ஙனமாக மறுதரங் குற்றஞ் செய்ததுகண்டு தண்டிக்குங்கால் தண்டனைப்படுங் குற்றவாளியானவன் "யான் இக்குற்றத்தை முன்னமே செய்தபோது சும்மா இருந்தமையா லிப்போது தண்டித்தல் கூடாது" எனக் கூறினால் அவன் கூற்றை அங்கீகரிப்பார் யாருமுண்டோ? அம்முறையே ஈண்டு நிகழ்ச்சியாகக் கோடலு மொன்று. இப்போது அந்தஞானசாகரத்தைத் தருவித்துப் பார்த்தேம். அதில் வெளியிடப்பட்ட இவ்விஷயம் இன்னாரால் எழுதப்பட்டதெனப் புலப்பட்டிலது. அநாமதேயமாக வெளிப்படும் போலிக்கூற்றுகளை அறிஞர் பொருட்படுத்தலெங்ஙனங் கூடும்? வேதாசலம்பிள்ளை 5-ஆண்டுக்கு முன் இதனை வெளியிடுங்கால் தமக்குத்தாமே அஞ்சித் தம் கையெழுத்திடாது அநாமதேயமாக வெளியிட்டப்பரிசை பார்த்து யாரும் மறுக்க வாராமையால் பயந்தெளிந்து இப்போது தமது கையொப்பத்துடன் மீட்டும் வெளியிடப்புக்கனரெனவுந் தோன்றுகிறது. அம்மம்ம! என்னே இவரது கபடத்தன்மை! வைசியமித்திரனில் "சுவாமி வேதாசலம்" எனக் கையெழுத்திடுவதைப் பிரசித்தப்படுத்த நினைந்தால் ஏதாவது புதிதாக எழுதி வெளியிட்டுக்கொள்ளலாகாதா? பழைய குப்பையைத்தானா வாரி இறைக்கவேண்டும்? இப்போது இதனை வெளிப்படுத்தவேண்டிய அவசியந்தான் யாதோ? அன்றியும் தாம் கூடத்தாம் ஞானசாகரத்தில் வெளியிட்டவாறே வெளியிடாமல் சிற்சில வாக்கியங்களை மாற்றியுமிருக்கின்றனர். ஏனையெனில், ஞானசாகரத்தில் "பிராமணர்களிற் பலர் கொழுக்கத் தின்று சோம்பேறிகளாகத் திரியும்படி" என எழுதியிருந்ததை யிப்பொழுது, "சரீர வன்மையுடையோர் கொழுக்கத் தின்று" எனவும், "கொழுத்த பார்ப்பார்க்கு" என முன்னெழுதியவர், இப்பொழுது "இயல்புடைய பிறர்க்கு" என மாற்றியு மெழுதியிருக்கின்றனர்.

" நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் தருமந்தான் இதுவரை இப்படி வீணாய்ப்போயினும், நமது தென்னாட்டிலுள்ள மற்றவர்களாவது ... ..நற்காரியங்களைச் செய்ய முன் வரவேண்டும் " என முன்னெழுதியவர் இப்பொழுது " நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் தருமம் இப்படி இதுவரை வீணாய்ப்போனாலும் இனியாவது அவர்கள்.....நற்காரியங்களைச் செய்ய முன்வரவேண்டும் " என, எழுதியுள்ளார். இதனால் இந்த வேதாசலம்பிள்ளை முதலில் பிராமணர்களை வாய்கொண்டமட்டும் திட்டினார். அவர்களும் இவருரையைப் பொருட்படுத்திலர், ஆதலால் இப்போது அவர்களைவிட்டுப் பொதுவாகக் கூறத் தலைப்பட்டாரென்பதும், நாட்டுக்கோட்டையாரையும் அவர்கள் செய்துவரும் உத்தம பதி புண்ணியங்களையும் தூஷித்து தென்னாட்டிலுள்ள வேளையரைத் துணைசேர்க்கப் பார்த்தது யாரும் இவருரையைப் பொருட்படுத்தி லெனைக் கேளாதிருப்ப மறுபடியும் நாட்டுக்கோட்டையார் பால் வந்து விழுந்து அரற்றத் தொடங்கியிருக்கின்றாரென்பதும் யாவருக்கும் எளிது புலனாம். இவர் எத்தனைதான் ஜாலஞ் செய்தாலும் இவர் ஜாலவித்தைக்கு மயங்குவாரியாருமில்லை யென்பதை இவரும் இவர் சகாக்களும் உணர்ந்துய்வாராக. ஒரு பத்திரிகையில் வெளிவந்த விஷயத்தை மற்றொரு பத்திரிகையில் வெளியிடுங்கால் இன்ன பத்திரிகையிலிருந்து எடுத்தெழுதியதென்பதை விளக்கலே மரபாம், அங்ஙனம் விளக்காது இப்போது புதிதாக எழுதியதுபோல் வெளியிடுவதுமொரு கபடத்தனமேயாம்.

(உ) கவிராயரவர்கள் விஷயத்தை விடுத்து விஷயம் எழுதினோரைப் பலவாறு இகழுகின்றார் என ந.சி.பிள்ளை பலபடக் கூறிப் பரிதபிக்கின்றனர் வேதாசலம்பிள்ளை யெழுதிய பொருந்தாத விஷயங்களொவ்வொன்றும் கவிராயரவர்களால் பூர்வ பக்கம் செய்து கண்டித் தொழிக்கப்பட்டிருக்கவும் " விஷயத்தை விடுத்து " என ந. சி. பிள்ளை கூறுதல் வெற்றுரையேயாம். இகழுகின்றார் என்கின்றனர். இகழ்ந்துரைத்த வார்த்தைகளை யெடுத்துக் காட்டியிருப்பாராயின் எதிர்வாறு விடையிறுத்திடுவோம்.

(ஊ) வித்துவான் ஸ்ரீ சி. நாகலிங்கம்பிள்ளையவர்கள் முதலானோர் வேதாசலம்பிள்ளை யெழுதிய இவ்விஷயத்தைக் கண்டித்து எழுதியுள்ளார்களெனவும், அவர்கள் விஷயத்தை மட்டும் கண்டித்துச் செல்கின்றார்களன்றி எழுதினோரைக் குறை கூறவில்லை யெனவும், கவிராயர் அங்ஙனமின்றி எழுதினோரை யிகழ்வது சரியன்றெனவும் ந. சி. பிள்ளை சொல்லுகின்றனர் இதனால் வேதாசலம்பிள்ளை யெழுதிய விஷயம் கண்டிக்கத் தக்கதேயென்பது இவர்க்கு முடன்பாடாகின்றது. ஆகவே தாமெடுத்த விஷயத்தை நழுவவிட்டு நிந்திக்காமற் கண்டிக்கவேண்டுமென்று கூறித் தம்முடைய வாதம் கண்டிக்கத் தக்கதென உடன்பாடு காட்டல் தோல்வித தானமாமென்பதை ந. சி.பிள்ளை யுணர்வாராக,

(௬) பொருளமையும் அழுக்காறும் கவிராயர் வாக்கியங்களிற் பிரதி பலிக்கின்றன என ந. சி. பிள்ளை கூறுகின்றார். பொருளமை யெனினும் அழுக்காறெனினும் ஒன்றே யென்பதை யுணர்ந்திலர். சொற்பொருளுணர்ச்சியற்ற இந்தச் சிவகுருநாதபிள்ளையா வாதிட வல்லுநர்? ஒரு சிங்கம் யானைமீது பாயுந் தருணத்தில் இடையில் வந்து மாட்டிக்கொண்டு பரதவிக்கும் மசகம்போலக் கவிராயரவர்கள் வேதாசலம்பிள்ளை கூற்றைக் கண்டிக்குமிடத்துச் சிவகுருநாதபிள்ளை வந்து நடுவே மாட்டிக்கொண்டு விழிக்கின்றனரே! ஐயோ பாவம்!

(௭). கவிராயர் என்னும் பட்டம் பரமனையே பாடுந் தன்மையினர்க்கே சாலும். ஏனையோர்க்குச் சாலாது என்று ந. சி. பிள்ளை பகர்கின்றார். தாம் எடுத்த வாதத்துக்கு இயைபில்லாத மற்றொன்றில் வந்து தலையிட்டுக்கொள்வது இவரது பாவபலனே போலும். பரமனையே பாடுவாரைத்தான் கவிராயரெனக் கூறவேண்டுமென்பது யாண்டுக்கற்றனரோ? ஈண்டும் சொற்பொருளுணர்ச்சி இவர்க்கில்லை யென்பது பொள்ளெனப் புலப்பட்டது. இங்ஙனம் பயனொடு படாதன பேசுதலும், சொற்களை யிரட்டித்துக் கூறுதலும், எடுத்த விஷயத்தொடு பொருந்தாதன வுரைத்தலும் தோல்வித் தானமாம் என்பது இவர் கற்ற தருக்க நூலில் இல்லை போலும்! ஐயோ பாவம்! தருக்க நூலை யிவர் எங்கே கண்டார்? எதோ வலைதெரியாமல் வந்து அகப்பட்டுக்கொண்டு திண்டாடுகின்றனர்.

(௮) வேதாசலம் பிள்ளையைக் கவிராயரவர்கள் நிந்தித்ததாக ந. சி. பிள்ளை ஓயாது கதறுகின்றார். வேதாசலம்பிள்ளையின் ஒழுக்கம் எத்தகைய தாயினுமாக. அவரை நிந்திக்கவேண்டு மென்று எண்ணம் கவிராயரவர்கட்கில்லை யென்பதை நாம் நேரிலறிவோம். சில சமயங்களில் பிறர் செய்த நன்மையைப் பற்றிக் கூறுவோர் "மகராசன் இந்த நற்காரியத்தைச் செய்தான்" என்பதும், தீமையைப் பற்றிக் கூறுவோர் "இந்த அநியாயத்தைச் செய்த கொடியவன் தலையிலிடிவிழாதா" என்பதும் உலக வழக்கம். அவ்வாறே மிகச்சிறந்த பதிபுண்ணியத்தைப் பழித்தும், உத்தமச் சிவபத்தரிற் பெரிதுத்தமர்களாகிய காட்டுக்கோட்டை நகரத்தாரைப்பழித்தும் வேதாசலம்பிள்ளை கூறிய குழறுபடைச் சொற்களைக் கண்டித்தொதுக்குமிடத்து ஏதாவது சில சொற்கள் சற்றுக் கடுமையாக வாலுங்கூடும். ஆனால் அது நிந்தையாக மாட்டாது. கவிராயரவர்கள் எழுதியவற்றில் அப்படிக் கடுஞ் சொற்கள் காணப்பட்டில. ந. சி. பிள்ளை முறையான நூலறிவைச் சற்குருவை யடுத்துக் கற்றிலாதவின் வேதாசலம் பிள்ளையின் மொழிகளில் மயங்கி அவரைப் பரமாசாரியராக நினைத்து வணங்கிப் பக்தி செய்து மிக்குயர்த்துவது இயல்பேயாகும். தம்மைப் போலவே எல்லாரும் வேதாசலம் பிள்ளையை யுயர்த்திக்கூற வேண்டுமென் இவர் எதிர் பார்க்கின்றனர் போலும். அது முடிகின்ற காரிய மன்றே? கற்றவர்கள் பலரும் வேதாசலம் பிள்ளையை ஒரு சாமான்ய மனுஷ்யரென்றே கருதி அதற்

கேற்றவாறுதானே கூறுவார்கள். அது கொண்டு (இந்தச் சிவகுருநாதபிள்ளை தம்மைப்போல் எனையரும் உயர்த்திக்கூறுமையால்) நிந்திப்பதாகப் பறையடித்தல் பொருந்தா தென்க.

வேதாசலம்பிள்ளை நாட்டுக்கோட்டையார் செய்துவரும் சிவாலயத் திருப்பணிதருமம் பயன்படாதென்றுகூறி இகழவில்லையென, ந. சி., பிள்ளை பீடிகையிட்டு வேதாசலம்பிள்ளை எழுதியதன் சாரத்தைக் காட்டுகிறேன் எனத்தொடங்கி, "நாட்டுக்கோட்டையார் செய்து போதரும் சிவாலயத் திருப்பணி தருமம ஒருவகையாய்ப் பாராட்டப்படத்தக்கதேயாயினும் அது இக்காலத்திற்கு ஏற்ற தர்மமாகவில்லை. 'ஏனெனின்,, எனத்தொடங்கி ஆங்கிலங் கற்றவர்களையும் வேதாந்திகளையும் மற்றும் பலரையும் பற்றி வேதாசலம் பிள்ளை கூறிய வீண் மொழிக்குப்பைகளையெல்லாம் வாரியிறைக்கின்றார். இவர் காட்டும் வீண்வாசகங்கட்கெல்லாம் கவிராயரவர்கள் விடையிறுக்கவில்லை யென்கின்றார். கவிராயரவர்கள் சாதிக்கவந்தது சிவாலயத்திருப்பணிதருமம் பயனுடையதென்பதேயாம். அதற்கு மாறானவற்றையெல்லாம் முறையாகக் கண்டித்து எடுத்த விஷயத்தைச சித்தாந்தஞ் செய்திருப்பதை மறைத்து ந. சி பிள்ளை பகட்டுவது அறிவுடையோரால் கொள்ளப்படாதென்க. இங்கே ந. சி. பிள்ளையின் வஞ்சகத்தைமட்டும் விளக்குவாம். வைசியமித்திரனில் வேதாசலம்பிள்ளை யெழுதியதாவது "சிவாலயத்திருப்பணிதருமம் ஒருவகையில் பாராட்டப்படத்தக்கதாயிருந்தாலும் இப்போது விருத்தியாகிவரும் நாகரீகத்திற்கும் மனிதர் அறிவு விருத்திக்கும் அது சிறிதும் ஏற்றதாயில்லை,, என்பதாம். இந்த வாக்கியங்களை எடுத்து எழுதவந்த ந. சி. பிள்ளை "சிவாலயத்திருப்பணிதருமம் ஒருவகையாய்ப் பாராட்டப் படத்தக்கதேயாயினும் அது இக்காலத்திற்கு ஏற்ற தர்மமாகவில்லை,, என வேதாசலம்பிள்ளை யெழுதியிருக்கிறாரென்று சொற்களைமாற்றிப் பகட்டிச் சாலஞ்செய்கிறார். சொற்களை அநுவதித்துரைக்குங்கால் உள்ளதை யுள்ளவாறே கூறுவதுதான் முறையாம். அங்ஙனமின்றி முன்னுள்ள சொற்களைமாற்றிப் பொருள் பிறழச்செயதல் மிகவும் தாழ்ந்தசெயலாம். அன்றித் தோல்வித்தானமுமாம். ந. சி. பிள்ளை அநுவதிக்கு முறையிலே மாற்றுங் கபடநாடகத்தை விளக்கிக்காட்டுதும். சிவாலயத்திருப்பணிதருமம் ஒருவகையில் பாராட்டப் படத்தக்கதாயிருந்தாலும் இப்போது விருத்தியாகிவரும் நாகரீகத்திற்கும் மனிதர் அறிவு விருத்திக்கும் அது சிறிதும் ஏற்றதாயில்லை' என்பது வேதாசலம்பிள்ளை வாக்கியம். அதை அநுவதிக்கும், ந.சி. பிள்ளை வாக்கியமாவது:—"சிவாலயத்திருப்பணிதருமம் ஒருவகையாய்ப் பாராட்டப்படத்தக்கதேயாயினும் அது இக்காலத்திற்கு ஏற்ற தர்மமாகவில்லை" என்பதாம். 'ஒருவகையில் பாராட்டப்படத்தக்கதாயிருந்தாலும்,, என்பதை "ஒருவகையாய்ப் பாராட்டப்படததக்கதே யாயினும,, எனமாற்றியுரைக்கின்றார். இது மட்டோ? "இப்போது விருத்தியாகிவரும்' நாகரீகத்திற்கும், மனிதர் அறிவு

விருத்திக்கும் அது சிறிதும் ஏற்றதாயில்லை. என்ற வேதாசலம்பிள்ளை வாக்கியத்தை "அது இக்காலத்துக்கு ஏற்றதர்மமாகவில்லை" என அநுவதிக்கின்றார். இனி பொருள் வகையால் அநுவதித்தனரோவெனில் வேப்பிள்ளை மொழிப்பொருளும், ம. சி. பிள்ளை பகட்டுரைப் பொருளும் மிகவும் வேறுபாடுடையனவாதலையுங் காட்டுதும். வேப்பிள்ளை மொழியில், "பாராட்டப் படத்தக்கதாயிருந்தாலும்" என்பதன்கணுள்ள உம் என்பது எதிர்மறைப் பொருளையே தருவதாம்: "மறப்பினும்" என்புழி மறக்கலாகாது எனப்பொருள் கொள்ளுமாறேயிதற்குங் கொள்ளப்படும். அன்றியும் "ஒருவகையில்" என முன்னுள்ள வாக்கியமோ பலவகையில் பாராட்டப்படத்தக்கதன்றென்பதைக்காட்டி மேற்கூறிய எதிர்மறைப் பொருளையே வலியுறுத்தும் "இப்போது விருத்தியாகி வரும் நாகரீகத்திற்கும் மனிதர் அறிவு விருத்திக்கும் அது சிறிதும் ஏற்றதாயில்லை" எனப் பின்னுள்ள வாக்கியமோ சிவாலயத்திருப்பணிதருமம் நாகரீகத்திற்கும் சிறிதும் ஏற்றதாயில்லை. அறிவு விருத்திக்கும் சிறிதும் ஏற்றதாயில்லை, என எதிர்மறைப் பொருளையே ஸ்திரப்படுத்தும். இங்ஙனமாக வேதாசலம்பிள்ளை சிவாலயத்திருப்பணிதருமம் பயனற்றதெனத் தாம்கொண்ட விபரீதக்கொள்கையை அவர்வாய்ச்சொற்கள் தெள்ளிது புலப்படுத்தி அவரைச்சந்தியிலிழுத்து விட்டன வென்பதைச் சிறுமகாரு முணர்வரென்க. வேப்பிள்ளை வாக்கியங்களை யுள்ளவாறே யெடுத்திடில் வேப்பிள்ளைக்கு அவமானமும், தாமெடுத்த வாதத்திற்குத் தோற்பலுமாதலைக்கண்ட ம. சி பிள்ளை வாக்கியங்களை மறைத்துத் தாம் தம்மனம் போனவாறு சொற்றொடர்களைமாற்றி யநுவதித்து வாதிக்கின்றார். இவரது தருக்க நூலுணர்ச்சி சாலவகன்றது. இனியிவர் பகட்டுரைப் பொருளையுங் கவனிப்பாம். "பாராட்டப் படத்தக்கதேயாயினும்" என்கிறார். தக்கதாயிருந்தாலும் என்பதற்கும் தக்கதேயாயினும் என்பதற்கும் பொருட்பேதம் யாரேயறியார்? "இக்காலத்திற்கு ஏற்ற தருமமாகவில்லை" என்கின்றார். நாகரீகத்துக்கும் அறிவு விருத்திக்கும் சிறிதும் ஏற்றதாயில்லை, என்பதற்கும், ஏற்ற தருமமாகவில்லை என்பதற்கும் பொருட்பேதம் எவ்வளவு தூரமுளது? இம்மட்டோ "சிவாலயத்திருப்பணிதருமம் பாராட்டப் படத்தக்கதொன்றே" என வேதாசலம்பிள்ளை யெழுதியிருப்பதாகவும் முழுப்பொய் கூறுகின்றார். வேதாசலம் பிள்ளை 5 வருஷங்கட்கு முன்னெழுதிய ஞானசாகரத்திலேனும், அதனையே இப்போது கூட்டியுங் குறைத்தும் எழுதி வெளியிட்ட வைசியமித்திரனிலேனும் இந்த வாக்கியத்தைக் காட்டுவாரா? பொய் கூறிப் பிழைப்பது மொரு பிழைப்பா? சிவகுருநாதபிள்ளையின் பொய்யும் புரட்டும் மிக அருவருக்கத்தக்கன. "கறையுறு மொருபொய் கூறிற் கலைகள் கழுந்து வாரே"

> "பொய்ம்மையே பாவ மெல்லாம் விளைதரு பூமியாகும்
> பொய்ம்மையே பிறவி யெல்லாம் புகப்புரி வித்து மாகும்
> பொய்ம்மையே வறுமை யெல்லாம் போதரப் புரிவதாகும்
> பொய்ம்மையே நாகமெல்லாம் புகுதரப் புகுத்தா நிற்கும்"

என்னும் ஆன்றோர் திருவாக்குக்களைச் சிந்தித்து ஒழிவாராக.

(எ) 'காலா தோலமான்-இந்தக்காலத்தில்' என, வேதாசலம்பிள்ளை வெற்றுரை தொடுத்தது பிழையாமென்று கவிராயசவர்கள் அறிவித்த பின்னும் அடங்காத ந. சி. பிள்ளை அச்சொற்றொடரைத் தாமும் அநுமோதித்துப் பொருள் விரித்து இடுக்கட் படுகின்றார். எங்ஙனமெனில் "காலம் அகோலம் என்னும் இருசொற்களாய்க் காலத்தினால் வேறுபட்டது என்னும் பொருள் தந்து அதாவது கோயில வழிபாடு மாறியுள்ள காலம் என ஏனைச் சொற்களோ டிணைந்து பயனுடைய சொல்லாய் நிற்கும்" என்கின்றார். "அகோலம்" என்றற்கு வேறுபட்டது என்னும் பொருளை யாண்டுக் கற்றனரோ? இவர் கூற்றுப் பெரும்பாலும் மனப்பால் குடித்துச் சொப்பனங் காண்பதாகவே முடிகின்றது. இனி அகோலம் என்பது இவர் கூறிய குழறு பாட்டுப்பொருளைத் தருவதாகக் கொள்ளினும் பொருந்ாதென்பதையும் அறிந்திலர். எங்ஙனமெனில் "காலா தோலமான இந்தக் காலத்தில்" என்றற்கு காலத்தினால் வேறுபட்டதாகிய இக்காலத்தில் எனப்பொருள் கொள்ளப் புகின் மாறுபட்டதற்கு முன்னும் பின்னுங் காலமே நின்று மாறுபட்டதற்கு ஏதுவும் காலம் மாறுபட்டதுங் காலம் என்றாகி இவர்காலம் பிழைபடுமாறு கண்டுணர்வாராக.

(அ) புதிதாய் ஆலயங்களைக் கட்டுவதையாவது சிலமான ஆலயங்களைச் சீர்ணோத்தாரணஞ் செய்வதையாவது வேதாசலம்பிள்ளை மறுக்கவில்லை யென்று தமக்கேற்ற இரண்டு வாக்கியங்களைக் காட்டி ந. சி. பிள்ளை மயக்க முயல்கின்றனர். வே. பிள்ளை யெழுதிய ஒன்பது வாக்கியங்களையும் அவரெழுதிய படியே தொடக்கத்திற் காட்டியுள்ளோமாதலின், ந. சி. பிள்ளை சாலவித்தை பயன்படா தொழியும். ந. சி. பிள்ளை சொல்கிறபடி பலமான ஆலயங்களை யிடித்துக்கட்டுவது மட்டுங் கூடாதென்பது வே. பிள்ளை கருத்தாயின் "பலமான ஆலயங்களை யிடித்துக் கட்டுவது தருமமா" எனவே தலைப்பெயர் கொடுத்திருக்கலாம். அவ்வாறு விஷயத்தையே பேசியிருக்கலாம். அங்ஙனமின்றிப் பொதுவாக "நாட்டுக்கோட்டையார் தருமம் பயன்படுமோ" என்று தலைப்பெயரிட்டமையானும், பொதுவாக ஆலயத் திருப்பணி தருமத்தையே பழித்தெழுதியிருப்பதாலும் ந. சி. பிள்ளை படுகிற பிரயாசையெல்லாம் வீணாவது திண்ணம். எப்படியாவது வேதாசலம்பிள்ளையை நல்லவராக்கவேண்டுமென்று சிவகுருநாதபிள்ளை மிக்க கஷ்டப்படுகிறார். ஐயோ பாவம்! என் செய்வர்! ந சி. பிள்ளை செய்கிற தந்திரங்களையெல்லாம் வே. பிள்ளை வாக்கியங்கள் வந்து அழித்துவிடுகின்றன வென்பதை யறிந்து அமைவாராக.

(க) சிவாலயங்களை யிடித்துக் கட்டுவதில் என்ன பயன் விளையப்போகின்றது? நன்றாய்ப் பலமாகக் கட்டப்பட்டிருக்கும் பழமையான சிவாலயங்களை யிடித்துக்கட்டுவது எவ்வளவு நிஷ்பிரயோஜனமான காரியம்? என்று வே. பிள்ளை யெழுதியிருக்கின்றனர். நாட்டுக்கோட்டையார் பலமாயுள்ள ஆலயங்களை யிடித்துக்கட்டுவதில்லை. சிலமாயுள்ளவற்றையே யிடித்துக்கட்டு

கின்றார்கள். ஒவ்வொரு ஆலயங்களையும் இடித்துக் கட்டுமுன் பார்த்திருந்தாலே. பிள்ளை இங்ஙனம் கூறார், என்று கவிராயரவர்கள் பூர்வ பக்கஞ் செய்தார்கள். "நாட்டுக்கோட்டையார் திருப்பணி செய்துள்ள ஆலயங்களையெல்லாம் சிலர் போய்ப் பார்த்திருப்பாரா. அல்லவே. அங்ஙனமாகவும் கிலமாயுள்ள ஆலயங்களையே யிடித்துக் கட்டுகின்றார்கள். சீரணோத்தாரணஞ் செய்கின்றார்கள் என்று இவர் கூறுவது மாத்திரம் எங்ஙனம் பொருந்தும்? உலகிற் பலர் அங்ஙனங் கூறும் உரைகொண்டு வேதாசலம்பிள்ளை கூறியுள்ளாராகலின் அது மறுக்கத்தக்கதாகாதென்க" என்கின்றார் ந. சி. பிள்ளை. இவர் கூற்று எவ்வளவு பொருத்தமானதென ஆராய்வாம். நாட்டுக்கோட்டையார் திருப்பணி செய்யுமுன்பே அந்த ஆலயம் பழமையுற்றுக் கிலமடைவதைத் தெரிந்து சீரணோத்தாரணஞ் செய்வது தான் வழக்கம். இதனைப் பலர் போய்ப் பார்த்தும் நேரிலறிந்து மிருப்பதுண்மை. இப்படி யிருக்கவும் "சிலர் போய்ப் பார்த்திருப்பாரா அல்லவே" என்று ந. சி. பிள்ளை கூறுவது விபரீதமாம். அன்றியும் யாரோ சொல்லக்கேட்டு வேதாசலம்பிள்ளை யெழுதிவிட்டாரெனவும் அதனால் மறுக்கப்படத்தக்க தாகாவெனவும் முறையிடுகின்றார். சொல்வார் சொன்னாற் கேட்பார்க்கு மதியில்லையா? கேள்விப்பேச்சுக் கேட்டு மனம்போனபடி எழுதப் புகுதல் அறிவாகுமா? கேள்விப் பேச்சுக் கொண்டு மயங்கி யெழுதியதாதலால் மறுக்கப்படத் தக்கதாகா தென்கின்றாரே. மறுக்கப்படாமைக்கு ஏது யாரோ சொல்லக்கேட்டு வேதாசலம்பிள்ளை யெழுதியதாம். நன்றாயிருக்கிறது. காரண காரிய முறையுந் தெரியாத ந. சி. பிள்ளைதான் தருக்கநூல் வல்லவர். இவரது தருக்க வுணர்ச்சி வியக்கற் பாற்று.

(௧௦) எல்லாத் தருமங்களும் ஒரு காலத்தில் பயன்படும் மற்றொருகாலத்தில் பயன்படா. வெயிற்காலத்துப் பாலைவனத்திற் பயன் படும் நீர்ப் பந்தல் மாரிக்காலத்துக் கங்கைக் கரையில் பயன்தராது. அதுபோல சிவாலயத் திருப்பணி தருமம் உரிய காலம் இடம் முதலியனவும், ஏற்றற்குரிய அதிகாரிகளும், இன்னும் ஏற்புடைய பிற ஏதுக்களும் பெறப்படாதாயின் பயன்படாதென்பது நியாய நூற் றுணிபாகும் என்கிறார் ந. சி. பிள்ளை. எந்த நியாய சாஸ்திரத்திலே இதனைக் கற்றாரோ? ஆலயத் திருப்பணி தருமம் இன்ன காலத்தில் பயன் படும் இன்ன காலத்தில் பயன்படாது என்று விதிக்கும் நியாய நூல் தான் யாதோ? தண்ணீர் வேட்கை தோன்றாமை மாரிக்காலத்துப் பெறப்படுதல்போல ஆலயந் தொழாமைக்கு ஒரு காலம் உண்டோ? எக்காலத்தும் எவ்விடத்தும் யாரும் ஆலயந்தொழ வேண்டுமாதலின் இப் பதிபுண்ணியம் காலங்கருதி ஆகும் ஆகாதென்று கூறுவது பொருந்தாதாம். காலங்கருதிச் செய்யப்படுவது இது, எக்காலத்துஞ் செய்யப்படுவது இது என்பனவாதிய பாகுபாடுணராத ந. சி. பிள்ளை "ஏற்றற்குரிய அதிகாரிகளும்" என்கிறாரே, ஏற்றல் - ஏற்றுக்கோடல் என்னும் பொருடரும். ஆலயத் திருப்பணி தரு

த்தை ஏற்றுக்கொள்பவராகிய அதிகாரிகள் யாவரோ? தண்ணீர்ப்பந்தல் தரும விஷயத்தில் ஏற்றற்குரிய அதிகாரிகளெனில் தாகத்தால் தண்ணீரை ஏற்க வருபவர் எனப் பொருந்தும். அதுபோல இங்குப் பொருந்துமாறின்றே. இச் சிவகுருநாதபிள்ளை முறையான கல்விப்பயிற்சியில்லாது கற்றவர்போலப் பாசாங்கு செய்து பகட்டுகின்றவராதலின் ஏத்தல் ஏற்றல் என்ற சொற்களின் பாகுபாடறியாது ஏத்தற்குரிய அதிகாரிகள் என எழுதுவதற்குப் பதிலாக தாம் திருத்தமாக எழுதுவதுபோல் நினைத்து ஏறதற்குரிய என வரைந்தனரென் பதே அங்கை நெல்லிபோற் றென்றுமென்க.

(கக) மகிபாலன் பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் தாம் எழுதிய 'நகரத்தார் சீர்திருத்தம்' என்ற புத்தகத்தில் இக்கொள்கையை (அதாவது ஆலயத்திருப்பணி தருமம் காலத்தாலும் இடத்தாலும் மாறுபட்டு ஒருகாற் பயனுடைத்தாகவும் ஒருகாற் பயனற்றதாகவும் இருக்குமென்று சிவ குருநாதபிள்ளை கொண்ட கொள்கையை) உடன்பட்டிருப்பதாக ஒரு பெரும் பொய் கூறுகின்றார். இலக்கியம் இலக்கணம் தருக்கம் சித்தாந்த சாஸ்திரம் இவைகளை முறையாகக் கற்று வடமொழித்தேர்ச்சியும்பெற்று மகா சைவசீல ராகவும் வித்துவரத்தினமாகவும் விளங்கும் ஸ்ரீ கதிரேசச் செட்டியாரவர்களை யெப்படியாவது தமக்குத் துணைகொள்ளவேண்டுமெனவும், அங்ஙனங் கொள் ளக்கிடைப்பின் தற்போது நகரத்தார்கள் தம்மீதும் தமதாசிரியராகிய வேதா சலம் பிள்ளைமீதுங் கொண்டுள்ள அருவருப்பைமாற்றி அன்னவர் தயவைப் பெறஏதுவாமெனவும் சிவகுருநாதபிள்ளை மிகவும் கஷ்டப்படுகின்றார். பட்டு மென்ன பயன்படுமோ? ஆலயத்திருப்பணியைக் குறைகூறும் வேதாசல சிவ குருநாதபிள்ளைகளிருவரும், ஆலயத்திருப்பணியைச் சிறந்த பதிபுண்ணியமாகக் கொண்டுகூறும் கதிரேசச்செட்டியாரவர்களும் ஒன்றுபடல் எங்ஙனமமையும்? கூகையும் அன்னப்பறவையும் ஓரிடத்திருப்பினும் கூகை கூகையே. அன் னம் அன்னமே. இதனையறியாது சக்ராவைத தம்முடன்சேர்க்கப் பார்க்கும் க. சி. பிள்ளையின் வஞ்சநினைப்பு நிறைவேறுதென்க. கதிரேசச் செட்டி யாரவர்கள் சீர்திருத்தப் புத்தகத்தில் ஆலயத்திருப்பணி தருமம் காலத்தால் மா றுபடுமென்று யாண்டும் எழுதவில்லை, அத்தருமம் தம்மவர்க்குக் குலதனமா கக்கிடைத்துள்ள பெரும்பாக்கியமாகிய மிகச் சிறந்த பதிபுண்ணிய மெனப் பலவகையிற் பாராட்டியுள்ளார்கள். இடம் நோக்கிச் சிற்றூர்க்குத் தக்கவாறு சிறிய ஆலயங்களையும் பெரிய நகரங்கட் கேற்றவாறு பெரிய ஆலயங்களையும் கட்டுதல் சிறப்பாமென்று எழுதி யுள்ளார்கள். இவர்கள் கருத்தும் ஆலய தருமம் பயன்படுவதில்லை யென்று கூறும் வே. பிள்ளை கருத்தும் ஒன்றுவ தெங்ஙனம்? செட்டியாரவர்கள் கருத்து சூரியனையும் வேதாசலம்பிள்ளை கருத்து இருளையும் ஒக்கும். சூரியனும் இருளும் ஒன்று என்று கூறும் கொள் கையே க. சி. பிள்ளை கொள்கையாம். இக்காலத்துக் கேற்ற வியித்திய, சாலை

முதலிய சில தருமகாரியங்களையும் நன்கு செய்ய வேண்டுமென்று செட்டியாரவர்கள் கூறியுள்ளார்கள். இதனையே வேதாசலம் பிள்ளையாகட்டும் இன்னும் யாரே யாகட்டும் கூறலாம். யாவரும் அங்கீகரிப்பார். இவ்விஷயத்தைப் பற்றி வாதமில்லை. இவையெல்லாம் உய்த்துணரும் அறிவாற்றலில்லாத சிவகுருநாதபிள்ளை செய்யும் சூழ்ச்சி அறிஞரை மயக்காமையை யினியேனும் தெரிந்து ஒதுங்குவாராக.

(கஉ) "கோயிலுக்குப் போகிறவர்களே யில்லாதபொழுது கோயிலைக் கட்டியாகும் பயனென்னை" என்று வே. பிள்ளை யெழுதினர். சிதம்பர முதலிய ஆலயங்களில் தினமும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து வணங்குகின்றார்கள் என்று கவிராயரவர்கள் கூறினார்கள். அதை மறுக்கவந்த ந. சி. பிள்ளை கோடிக்கணக்கான ஜனங்களிருக்கையில் ஆயிரக்கணக்கான ஜனங்களென்மாத்திரம், என்கின்றார். கோயிலுக்குப் போகிறவர்களே இல்லாதபொழுது என்று தேற்றேகாரங் கொடுத்துக் கோயிலுக்கு வருபவர்கள் ஒருவருமில்லையென்றார் வேதாசலம் பிள்ளை. ஆயிரக்கணக்காக வருகிறார்களே யென்றால் கோடி ஜனங்களில் ஆயிரம் பேர் தானே வருகிறார்கள் என்கிறார் சிவகுருநாதபிள்ளை. இவரது வாதமுறை எவ்வளவு ஒழுங்கீனமாகவுளது என்பதை அறிஞரறிக.

(கங) தேவிகோட்டை முதலிய நகரங்களில் அநேக வருஷங்களாக அரிய பெரிய வித்துவான்கள் பலர் வந்து எண்ணிறந்த சபைகூட்டிப் பிரசங்கங்கள் செய்திருக்கிறார்கள். 20 வருஷங்கட்கு முன்னமே தேவகோட்டையிலொரு சபை ஸ்தாபித்திருப்பதாகவும் கேள்விப்படுகிறோம். சமீபகாலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளுள் முதலாவதாகத் தோன்றி நன்கு நடைபெற்று வருவது சன்மார்க்க சபையே. பின்னர் மற்றும் பல சபைகள் தோன்றி நன்கு நடைபெறுகின்றன. இவற்றை யெல்லாம் நோக்கி பல வருஷங்களாக நகரத்தார் ஊர்களில் சபைகளும் கலாசாலைகளும் ஏற்பட்டுள்ளன வென்று கவிராயர்கள் கூறியிருக்கிறார்கள் பல எனற்கு 1 க்கு மேற்பட்ட எண்ணென்று பொருளறியாத நசிப்பிள்ளை 1911 வருஷத்துக்கு முன்னர் பல சபைகளில்லையே யென்று கூறுகிறார். 1914 வருஷத்தில் பல வருஷங்களாக என்றால் 1911 வருஷத்துக்கு முன்னிருக்க வேண்டுமென்பது என்ன விதியோ? பசுவைக்கண்டால் உபசரிப்பதும் பாம்பைக்கண்டால் தடியாலடிப்பதும் உலகியல். இஃதறியாது ஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்கள் கூறியதை என் மறுக்கவில்லை யென்கிறார் ந. சி. பிள்ளை. செட்டியாரவர்கள் சாஸ்திர விரோதமில்லாமல் பிறர் மனம் நோவாமல் எடுத்தவிஷயத்தை ஞயம்பட வுரைப்பார்களாதலின் மறுப்பவரில்லர். வே. பிள்ளை சாஸ்திர விரோதமாகவும் பிறர் மனம் நோகும்படியும் துடுக்காகப் பேசுவதால் சென்ற சென்ற இடங்கடோறும் கண்டிக்கப்பட நேரிடும். அன்றியும் ஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்கள் சிவாலயத் திருப்பணி தருமம் சால்த

தால் மாறுபடுமென்று யாண்டுங் கூறியிருக்கவும் அவர்கள் கூறியதாக ந. சி. பிள்ளை முழுப் பொய்கூறுகின்றாரே. செட்டியாரவர்களைத் துணைசேர்க்கக் கருதும் ந. சி. பிள்ளை செட்டியாரவர்கள் கூறாததொன்றைக் கூறினதாகச் சொல்கிறாரே. இவரது பொய்யையறிந்தும் செட்டியாரவர்களும் பிறரும் இந்த ந. சி. பிள்ளையை மதிப்பார்களா? இனியாவது உண்மை பேசியொழுகுவாராக.

(௧௪) "பெரியார் தமக்கு அன்புடையாரை அறங்களில் மேலும் மேலும் ஊக்குதற் பொருட்டு அவர்களாற் செய்யப்பெறும் அறங்களைக் குறைத்துக் கூறுதலே செய்வர்" என்கிறார் ந. சி. பிள்ளை. இங்ஙனம் குறைத்துக் கூறுதல் முறையென்பதற்கு விதியாதோ? பெரியார் சிறிதறஞ் செய்தாரையும் வியந்து கூறினன்றோ அவர்க்கு மேலுமூக்கமுண்டாகும்? குறைத்துக் கூறினால் ஊக்கமுண்டாவதெங்ஙனம்? சாமாந்ய அறஞ்செய்தவர்களிடம் அவரை மேலு மூக்குதற்பொருட்டு இது சாமான்ய அறம் இதனிற் சிறந்த அறமிது என விளக்கிக் காட்டல் சாலுமன்றிக் குறைத்துக்கூறல்சிறிதுஞ்சாலாதென்க. கூறுதலே செய்வரெனத் தேற்றேகாரங் கொடுத்தல் மிகவும் அறியாமையேயாமென்பவதைத் தெளிவாராக.

(௧௫) 8-6-14 ல் வெளியான் வைசியமித்திரனில் சிவகுருநாதபிள்ளையெழுதியன பெரும்பாலும் கவிராயரவர்கள் மீது உண்டாகிய கோபத்தாலும், பொறாமையாலும், எழுந்த தூஷணை மொழிகளேயாம். "அழுக்கா றுடையார்க்கது சாலுமொன்னார், வழுக்கியுங் கேடீன்பது" "அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ, டவ்வையைக் காட்டிவிடும்" என்பவாதலின் அதைப் பற்றி யாம் யாதும் கூற நினைந்திலம்.

(௧௬) ஸ்ரீ வீமகவியவர்கள் கவிராயரவர்களைப்பற்றி ஏதோ சொல்லியதாகச் சிவகுருநாதபிள்ளை சொல்கின்றார். வீமகவியவர்களும் கவிராயரவர்களும் கோர்ட்டில் வாதி பிரதிவாதியாக வாதித்துப் பகைமைப் பட்டிருப்பது உலகறியும். ஆதலின் பகைமை பாராட்டிக் கூறும் போலிக்கூற்றுகளைப் பெரியார் ஓரணுத்துணையு மதியாரென்க.

(௧௭) வேதாசலம் பிள்ளை திருநெல்வேலியில் முறை பிறழ்ந்து பிரசங்கித்த காலத்து ஸ்ரீ பால்வண்ண முதலியாரவர்கள் வாதுக்கழைப்ப மாட்டேனென்று மறுதினங்களில் ஏற்படுத்தியிருந்த உபந்யாசங்களையும் செய்யாது

"சிவிகை யோர்வழி விறலிய ரோர்வழி செல்லக்
கவிகை யோர்வழி கற்பவ ரோர்வழி கடுகக்
குவிகை யேவல ரொருவழி கூடா துள்ளத்
தவிகை யோவரு மொருவழி யகன்றிட் டேகன்றான்."

என்றுங்கே யோடியதை யப்பட்டினருழுது மறிவதாகவும் முழுப்பூச ணிக்காயைச் சோற்றில் மறைப்பது போன்று சிவகுருநாத பிள்ளை மறைக்கப் பாடுபடுகின்றார். ஆயினும் உள்ளது உள்ளதாம். இல்லது இல்லதாம். அறி ஞருணர்க.

(சஅ) கவிராயரவர்கட்குச் சித்தாந்தப் படிப்பில்லை யென்று சிவகுரு நாதபிள்ளை ஏதேதோ வேண்டா கூறி வீண்கடை பரப்புகின்றார். கவிராயு ரவர்களின் கல்விப் பெருமையும் சிவகுருநாத பிள்ளையின் கல்விச் சிறுமையும் உலகறிந்ததாதலின் யாம் இங்கு ஒன்றும் சொல்ல முற்பட்டிலேம். 'சித்தாந் தம்', என்னும் சொற்பொருளையும் அறியாதவர் வேதாசலம் பிள்ளை யென்பது "சுவாமி, வேதாசலம் பாராட்டிய விபரீதார்த்தம்" என வித்தியாபூநவில் வெளிவந்தது கொண்டு தெளிவாம். அவர் சேட்ராகிய சிவகுருநாத பிள்ளையின் சித்தாந்த வுணர்ச்சி எததகைய தென்பதை இவண் விரித்தல் மிகையா மென விடுத்தாம்.

(சக) கவிராயரவர்கள் நிலம் வாங்கற்கென்றும் மனைவாங்கற் கென்றும் பொருளீட்டுகின்றா ரென்று பரிதாபத்தோடு தமதுபொறாமைத் தீயால்வயிறெ ரிவது முழுதுங் காட்டுகின்றார் சிவகுருநாத பிள்ளை. கவிராயரவர்கள் தமக்கு வேண்டியவர்களிடம் உண்மை கூறி அன்னவருதவியைப் பெறுவதால் யாது குறை? யோகத்தைப் போதிக்கிறேன் அதற்கு இத்தனை ரூபா கொடுங்கள், ஞானத்தைப்போதிக்கிறேன் அதற்கு இத்தனை ரூபா கொடுங்கள், நூறு வரு டம் ஜீவிக்கச் செய்கிறேன் அதற்கு இத்தனை ரூபா கொடுங்கள், தவாச்சிரமங் கட்டுகிறேன் அதற்கு இத்தனை ரூபா கொடுங்கள். சிகா கோவிற் சென்று சைவசமயத்தை நிலை நாட்டப்போகிறேன் அதற்கு இத்தனை ரூபாகொடுங்கள், மனிதவசியம் போதிக்கிறேன். அதற்கு இத்தனை ரூபாகொடுங்கள் என்று ஊரூ ராய்ச் சென்று வெட்கமின்றிப் பிறர்பாற் கூறி எமாற்றிப் பொருள் வாங்கிப் பிழைக்க வில்லையே. மனைவி மக்களுடன் கூடிக்குலாவி ஓதுகிடத்திலவர் களை விட்டுக் காஷாயருத்திராக்க விபூதி தரித்து மகா சந்யாசியாகவும் தான் றோன்றிப் பொய்க்குருவாகவும் வந்து பகட்டிப் பொருள் கவர்ந்துபோக வில் லையே. தூத்துக்குடி முதலிய இடங்களிலுள்ள சாதுவான பெண்டுகளை மய க்கி அவர்கள் வீடு வீடாய்ச் சென்றிரந்து தரும்படி கேட்டு அவர்களிடம் பொரு ளைப் பெறவில்லையே. மாணவச் சிறுவர்களை, ஏமாற்றிப் பேசி அவர்கள் தங் கள் பெரியோர்களறியாது கொடுக்கும் பொருளை மறைவாகப் பெற்றுப் பிழை க்க வில்லையே. ஓர் ஆஷாடபூதிச் சாமியாரைப் பிடித்து வாய் 'பேசாதிருக்கச் செய்து தம்முடன் அழைத்து வந்து "இவர் இமய மலையிலிருந்து இப்போது தான் வந்துள்ளார். மூந்நூறு வயசு சென்றவர், மகாதவசி, நம்மிடம் ஞானோப தேசம் பெற வந்திருக்கிறார்" எனப் பிறர்பாற் கூறி மயக்கிப் பொருள் பெற வில்லையே. இராமலிங்க சுவாமிகள் அடங்கிய காலமும் நான் பிறந்த கால

மும் ஒன்று, ஆதலின் அந்த மகானுடைய ஆவியே எனது சரீரத்துட் புகுந்து சம்ரச ஞானத்தைப் போதிக்க வந்திருக்கிறது என்று பேதையரிடம் சொல்லி வஞ்சித்துப் பொருள் சேர்ந்து வயிறு வளர்க்க வில்லையே. இப்படி யெல்லாம் பிழைப்பதன்றோ பெரிதும் அவமானம்? இவைகளை யெல்லாம சித்த சமாதானத்தோடு சிந்தித்துச் சிவகுருநாத பிள்ளை வாயடங்குக.

(உக) அன்னதானம் உயர்ந்தது எனக் கவிராயரவர்கள் கூறியதால் அவர்கள் "சாப்பாட்டுப பிரியர்" என்று க. சி. பிள்ளை எள்ளனமாக வரைகின்றார். அன்னதானத்தை யுயர்த்திக் கூறும் பண்டைய நூலாசிரியர்களான பெரியோர்கள் யாவரையும் இங்ஙனம் பற்றுமாறறிந்திலர். அப்பாவத்தால் தாமடையும் தெய்வ தண்டனையையும் கருதிலர். அன்னதானத்தைச் சிறப்பித்துக் கூறிய பண்டைய நல்லாசிரியர்கள் யாரும் இவர் கூறியாங்குச் சாப்பாட்டுப் பிரியர்களேயாயின் கவிராயரவர்களும் அங்ஙனமாக. அன்னதானத்தினும் வித்தியாதானம் உயர்ந்த தென்பதைக் கவிராயரவர்கள் யாண்டும் மறுத்திலர் என்பதை சிவகுருநாத பிள்ளை கண் திறந்து பார்த்து அறிவாராக.

(உ௨) "ஞானசாகரப் பத்திரிகையும் பொருந்தாவிஷயங்களை வெளியிடுகின்றன; என இப்போது கவிராயரவர்கள் வரைந்துள்ளார்கள். ஆனால் முன் னொருசமயம் ஞானசாகரத்தைப் புகழ்ந்து அவர்கள் எழுதியிருக்கிறார்களென்பதை யெடுத்துக்காட்டி ஓர்காற்புகழ்ந்த கவிராயரவர்களே மற்றொரு காலிகழ்தல்முன்பின் முரணுமென க. சி. பிள்ளை கூறுகின்றார். சிலமாதங்கட்குமுன் வேறொருவரும் இவ்விஷயத்தை வைசியமித்திரனில் வெளியிட்டனர். இரண்டும் உண்மையே: ஆயின் ஓர்காற் புகழ்தலும் ஓர்காலிகழ்தலுங்கூறல் தகுமோவென பிறர் ஐயுறல்கூடும். அவ்வையத்தை நீக்கவேண்டி யாமறிந்தமட்டில் உண்மையே விளக்கி ஞாயத்தை வெளியிடுவோம். 1902ஆம் ஞானசாகரம் தொடங்கிய காலத்தில் முதற்பதுமம் 4 இதழ்வரை கவிராயரவர்கட்கு அனுப்பி வந்த வேதாசலம்பிள்ளை அப்போது தாமியற்றிய மும்மணிக்கோவைப் புத்தக மொன்றையும்கவிராயரவர்கட்குஅனுப்பிஞானசாகரத்தைப்பற்றியும் மும்மணிக்கோவையைப்பற்றியும் கவிராயரவர்களின் அபிப்பிராயத்தைஎழுதியனுப்புமாறு வேண்டிக்கொண்டனர் வேதாசலம்பிள்ளைகேட்டுக்கொண்டபடிகவிராயரவர்கள் ஞானசாகரத்தில முதல் 4 இதழ்களையும் மும்மணிக்கோவையையும் படித்துப் பார்த்து அவ்விரண்டினையும் பற்றித் தமக்குத் தோன்றிய நல்லபிப்பிராயத்தையே வேதாசலம்பிள்ளைக்கு எழுதினார்கள். வேதாசலம் பிள்ளையும் கவிராயரவர்களின் மதிப்பான அபிப்பிராயங் கிடைத்தற்கு மகிழ்ந்து அபிப்பிராயக்கடிதத்தை ஞானசாகரத்தில் வெளியிட்டுள்ளார். கவிராயரவர்கள் கொடுத்தஅபிப்பிராயக் கடிதத்திலேயே முதல்4 இதழ்களைப் பார்த்தேன், என்று கூறுகின்றார்கள். ஆகவே கவிராயரவர்களு கொடுத்த நல்லபிப்பிராயம் இற்றைக்குப் பன்

விரண்டு வருடங்கட்கு முன் முதலில் வெளிவந்த 4 இதழ்கட்கு மட்டும் ஏற்கு மன்றி அதன் பின்னர்வரும் ஏனையஇதழ்கட்கும் பதுமங்கட்கும் ஏற்குமாறில்லை யென்பது யாரே யறியார்? வேதாசலம்பிள்ளை ஆரம்பகாலத்தில் சைவ சாஸ்திரங்கட்குக் கட்டுப்பட்டு ஒழுங்காகப் பத்திரிகை நடத்தியபோது பலரும் அப்பத்திரிகையைப் புகழ்வதும், அங்ஙிலைமாறி தாமோர் புதிய ஆசிரியராக வேண்டுமெனக் கருதிச் சிலபுதிய போலிக் கொள்கைகளைப் பத்திரிகையில் வெளியிடுங்கால் யாவரும் அருவருத்துத் தள்ளுவதுமியல்பே. இதனால் புகழப் பட்ட பத்திரிகையும் இகழ்ந்தொதுக்கப்பட்ட பத்திரிகையும் பெயராலொன்றாயினும் விஷயத்தாலும் காலத்தாலும் உருவத்தாலும் வெவ்வேறாகுமன்றோ? ஆகவேமுன்னர்ப் புகழ்ந்ததும் பின்னர் இகழ்ந்ததும் ஏற்ற செயலே யாகும். இவ் வண்மைகளை யெல்லாம்காட்டாது ஞானசாகரத்தைப்புகழ்ந்தவரே அதனை யிகழ்கின்றார் என்றுமட்டும் கூக்குரலிட்டாற்றுவதால் யாதுபயன்? இதனை ந. சி. பிள்ளையும் அவர் சகாக்களும் அறிந்து அசத்தொழிந்து அடங்குவாராக. இங்கே இன்னொருவிஷயம் கவனிக்கத்தக்குரியது. அதாவது:—12 ஆண்டுகட்கு முன்னரே வேதாசலம்பிள்ளை தாமியற்றிய நூலையும் தாமெழுதிய பத்திரிகையையும் கவிராயரவர்கட்கனுப்பி அவர்கள் பார்த்து அபிப்பிராயம் தரவேண்டி அங்ஙனமேபெற்று மகிழ்ச்சி யடைந்திருக்கிறார். இதனால் வேதாசலம்பிள்ளை தமது கல்வித்திறத்தைப் பிரசித்தப்படுத்த கவிராயரவர்களின் அபிப்பிராயம் தக்கதாகக் கருதினமை வெள்ளிடை. இங்ஙனம் வேதாசலம் பிள்ளையால் தமது கல்வியாற்றலை அளந்துரைக்கும் தகுதி வாய்ந்தவர்களாக மிக மதிக்கப் பெற்ற கவிராயரவர்களைக் கல்வியில்லாதவர்களென்று வேதாசலம் பிள்ளையின் சீடராகிய சிவகுருநாத பிள்ளை கூறுகிறார். ஆகவே இந்த ந.சி.பிள்ளை குருவுக்கு மிஞ்சின சீடராமென்பது உலகறியத் தக்கதொன்றாம். இந்த இருபிள்ளைகளும் இப்பொழுதும் பெரியோர் ஒழுக்கங்களைப் பின்பற்றி ஒழுகுவாராயின் உலக மதிப்பைப் பெறுதற்கு யாது தடை? அவரவர் ஒழுக்கத்துக்கேற்றவாறு அவ்வப்போது புகழ்ச்சியும் இகழ்ச்சியும் வருமென்பதை அறிவாராக.

(௨௩) "பொய்யாமை பொய்யாமை நன்றேற்றி னறம்பல
செய்யாமை செய்யாமை நன்று" எனத் தேவர்குறளைச் சிவகுருநாத பிள்ளை காட்டியுள்ளார். யாரேனுஞ் சொல்லக் கேட்டு ஏதோ ஒரு குறளைக் காட்டி விட்டால் தாம் குறளாராய்ச்சி யுடையரெனப் பிறர் மதிப்பரென்பது இவர்கருத்து. குறளின் பெருமையெங்கே சிவகுருநாத பிள்ளை அறிவின் சிறுமையெங்கே. யாரோ சொலக் கேட்டுக் குறளையெழுதினரெனல் எதனாற் காண்டுமெனின் தாம் எடுத்துக் காட்டுங் குறளைப் பிழையின்றி யெழுதாமையாற் காண்டு மென்க. "பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" என்பதே தேவர் வாக்கு. ஆற்றின் என்பதன், மூன்று என்னுமோர் சொல்லைப் புகுத்தி வேதவாக்கைக் கெடுத்து விட்டனர்.

இம்மட்டோ "பிற" எனற்கு "பல" என வரைந்து பொருட் சுவையைக் கெடுத்தனர். குறள் வெண்பா இலக்கணமே சிதையச்செய்தனர். வேதவாக்குகட்கிடையே தமது சொற்களைச்சேர்த்துத் தெய்வத்தன்மையைக் கெடுத்த இந்தச் சிவகுருநாத பிள்ளை, தாம் தருக்க நூல் வல்லாரெனப் படாடோபஞ் செய்து பகட்டும் வித்தை பெரிதும் பரிபவமேயாம்-

"கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்
பெற்றதாம் பேதையோர் சூத்திரம்—மற்றதனை
கல்லா ரிடைப்புக்கு நாணாது சொல்லித்தம்
புல்லறிவு காட்டி விடும்" என்ற செய்யுட்கு இச்சிவகுருநாத பிள்ளை செய்கை சரியாயிருக்கிறது என்பதை யாவரே யறியார்?

(உ௪) வேதாசலம் பிள்ளை சிவாலயத்திருப்பணி தருமங்களைக் குறைகூறவில்லை யென்று சிவகுருநாத பிள்ளை கரி கூறிமுடிக்கிறார். இவரது கரிக்கூற்று யாம் மேலே காட்டிய நியாயங்களால் தாக்கப்பட்டுத் தட்டழிந்து போனமையின் வேதாசலம்பிள்ளை சிவாலயத் திருப்பணியைத் தூஷித்தது உண்மை யென்பதும், ஆனால் அவர் ஆழ்ந்த யோசனையின்றிக் கூறிவிட்டு இப்போது சங்கடப்படுகிறாரென்பதும், அவர் தெரியாமற் செய்த பிழையை மறைக்கச் சிவகுருநாத பிள்ளை பாடுபடுகிறாரென்பதும், என்ன பாடு பட்டாலும் இவர் நினைப்பின்படி ஏமாற்ற முடியாதென்பதும், நகரத்தார் தயவுக்குப் பாத்திரமாக வேண்டுமாயின் தாம் அறிவின்றிச் செய்தது பிழை யென்று ஒப்புக்கொண்டு வருதலே சிறப்பா மென்பதும். அங்ஙனம் செய்யாது இவ்விரட்டைப் பிள்ளைகளும் எத்தனை சால வித்தை செய்தாலும் அத்தனையும் பெருங்காற்றி லடிபட்டுப்போம் பஞ்சுத்துய்ப் போலாமென்பதும் அறிந்து அடங்குக.

வேதாசலம்பிள்ளை சிவகுருநாதபிள்ளையென்னும் இரு பிள்ளைகளும்கோயில்கட்டுவது பயனற்ற செயலென மதிமயங்கிக் கூறுகின்றார்களாதலின் இந்த இரட்டைப் பிள்ளைகளின் மருட்சிக்கு மருந்தாக இதனை வெளியிட்டனம். பிள்ளைகட்கு நோய்வந்தால் மருந்துகொடுத்துக் குணப்படுத்த முயல்வது பெரியோரியல்பு. சிலபிள்ளைகள் மருந்துட்கொண்டு வியாதிநீங்கப் பெற்றுய்யும். சில பிள்ளைகள் என்னமருந்து கொடுப்பினும் வியாதி மேலிட இறந்தொழியும். இறந்தொழியு நிலையிலுள்ள பிள்ளைகளுக்குங்கூட "இறுமுயிர்க்கும் ஆயுண் மருந்தொழுக்கல் தீதன்றால் அல்லனபோல் ஆவனவுமுண்டு சில" என்பவாதல் பற்றி மருந்து கொடுக்கவேண்டியது அவசியமாம். அம்முறைபற்றியே மருட்சி வியாதி தலைக்கேறப்பெற்ற இவ்விரண்டு பிள்ளைகளுக்கும் மருந்து கொடுக்க முன்வந்தாம். இம்மருந்தால் இப்பிள்ளைகள் வியாதி நீங்கப்பெற்றுய்யவேண்டுமென்பதே எமது விருப்பம்.

இந்த இருபிள்ளைகளும் யாம் கொடுத்திருக்கிற வியாசமருந்தை யுட்கொள்ளுங்கால் இப்பிள்ளைகள் அநுசரிக்கவேண்டியபத்தியத்தையும் கூறுகின்றோம். யாங் கட்டளையிடுகிறவாறே பத்தியமாக இருந்து இம்மருந்தை யுட்கொண்டால் இவர்களைப பிடித்து ஆட்டி வருத்தும் மருட்சிப்பிணி முற்றுந் தொலையுமென்பது நிச்சயம்.

பத்திய வகை:—பொறாமை, பேராசை, வஞ்சகம், பிறன்கேடுநினைதல், ஏமாற்றுதல், தற்பெருமை பாராட்டல், அகங்காரம், பிறரைப்பழித்தல், சாஸ்திரவரம்புமீறல் ஆகியதீமைகளைக் கொள்ளலாகாது. ஒற்றுமை, பணிவுடைமை, சிவபக்தி, சாஸ்திர வரம்புக்கடங்குதல், சத்தியம் பேசுதல், கற்பு, நல்லொழுக்கம், வேதத்துக்குத்தக்கபடி நடத்தல், ஆலயவழிபாடுசெய்தல், அறஞ்செய்வார்க்கிரங்குதல், சாதுக்கள் சகவாசஞ்செய்தல், நல்லாசிரியரையடுத்து முறையாக இலக்கிய இலக்கண சாஸ்திரங்களைக் கற்றல் முதலியவற்றைச் சிறிதும் மறவாது அநுசரிக்கவேண்டும்; இவ்வாறு ஒழுகுவார்களானால் நிச்சயமாகஇவர்கள் மயக்கப்பிணி நீங்கும். உலகமதிப்பு வரும். இங்ஙனம் நலம் பெற்று வாழ இறைவனருள்க.

சங்கரலிங்கம்பிள்ளை.

சமாசாரக்கொத்து.

காகிதப் பீரங்கிகள்:—ஜெர்மனியில காகிதத்தால் பீரங்கிகள் செய்கிறார்கள். காலாட்படைகளுக்கு இரதப்பீரங்கிகள் செய்யப்படுகின்றன. பீரங்கிகளை இழுக்கும வண்டிகள் கிடையாதிருக்கும்பொழுது ஒவ்வொரு வீரனும் இலகுவாய்த் தன்னோடு கொண்டுபோவதற்கேதுவாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் குழல் குறுக்களவு இரண்டங்குலம்.

* * *

நெருப்பில் வேகாத காகிதம்:—ஓர் விற்பன்னர்* ஒருவகைக் காகிதஞ்செய்திருக்கின்றனர். அதிலெழுதுவதற்கேற்ற மையும் உண்டாக்கினர். அதனாலக்காகிதத்திலெழுதி அக்கினியிலிட்டால் அது வெந்து போகாதாம்.

* * *

ஜினீவா தேசத்தில் முனிஸிபாலிட்டியார் குழந்தைகளின் பிறப்பைப் பதியும்போது அவைகளைக் காப்பாற்றும மாதிரியைப் போதிக்கும் ஒரு சிறு புத்தகத்தையும் கொடுக்கிறார்களாம்.

* * *

ஓர் கடிகாரம்:—சுவிஸ் தேசத்திலுள்ள ஒருவன் யானைத் தந்தத்தினால் ஓர் கடிகாரம் செய்திருக்கிறான். இயந்திரங்களும் ஊசிகளும் மற்ற யாவும் அத்தந்தத்தினாலேயே செய்யப்பட்டு ஒழுங்காய் நேரம் குறிக்கின்றதாம்.

* * *

ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க்கில் ஒரு பேசும் நாயிருக்கிறது. அதற்கு 75000 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியும் நாயின் சொந்தக்காரர் அதை விற்க சம்மதப்படவில்லையாம். அதைப் பல மிருக சாஸ்திரிகள் பரீக்ஷித்துப் பார்த்ததில் வாஸ்தவத்தில் அதற்கு அபாரசக்தி யிருப்பதாகத் தெரியவந்தது. அது அநேக ஜெர்மன் வார்த்தைகளை தெளிவாய் உச்சரிக்கிறதாம்.

பத்திராதிபர்.